# ஈழநாதம்

EELANATHAM — மக்கள் நாளிதழ்

பக்கங்கள் - 08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | வைகாசி - 32 | 15-06-2003 | ஞாயிற்றுக்கிழமை | ஓசை 117



சாணக்கியா

அச்சுப் பொருட்கள்

காகிதாதிகள் வாணிபம்

யாழ்சாலை, கிளிநொச்சி.


## சர்வதேச கடற்பரப்பில் வைத்து

# பரிசோதனைக்கு அனுமதிக்கப்பட்ட நிலையிலும் புலிகளின் கப்பல் கடற்படையால் மூழ்கடிப்பு!

## கடற்படைக்கப்பலுக்கு அழைக்கப்பட்ட போராளிகள் தம்மிடம் இல்லை எனவும் மறுப்பு

(கிளிநொச்சி)

**சர்வதேசக் கடற்பரப்பில் வைத்து விடுதலைப் புலிகளின் எண்ணெய் தாங்கிக் கப்பலான எம்.ரி.சொச்சின் சிறிலங்கா கடற்படையினால் நேற்றுக் காலை தாக்கி மூழ்கடிக்கப்பட்டது. இக்கப்பல் தாக்குதலுக்குள்ளான போது உயிர்காப்பு படகுகள் மூலம் சிறிலங்கா கடற்படைக் கலங்களுக்கு வந்த போராளிகளைத் தாம் கைது செய்யவில்லை எனவும் அவர்கள் தம்மிடம் இல்லை எனவும் சிறிலங்கா கடற்படையினர் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்குத் தெரிவித்துள்ளனர்.**

இக்கப்பல் தாக்கி மூழ்கடிக்கப்பட்டமை குறித்து விடுதலைப் புலிகளின் அரசியல்துறையினர் விடுத்துள்ள செய்திக் குறிப்பொன்றில்,

நேற்று அதிகாலை முல்லைத்தீவிலிருந்து 265 கடல் மைல் தொலைவில் (1147வ 8431கி) சர்வதேச கடற்பரப்பில் பயணித்துக் கொண்டிருந்த எமது எண்ணெய் தாங்கிக் கப்பலான சொச்சினை சிறிலங்காக் கடற்படையின் ஆழ்கடல் ரோந்துக் கப்பல்கள் வழிமறித்தன. இக்கப்பல்களின் அறிவுறுத்தல்களுக்கு அமைய காலை

(08 ஆம் பக்கம் பார்க்க)

## கைது செய்யப்பட்ட போராளிகளுக்கு ஆபத்து ஏற்படின் பின்விளைவு பாரியதாகும்

### விடுதலைப்புலிகள் எச்சரிக்கை

(கிளிநொச்சி)

கரையிலிருந்து 266 கடல் மைல் தொலைவில் சர்வதேச கடற்பரப்பில் வைத்து எமது கலத்தை தாக்கி மூழ்கடித்தமையானது ஓர் அப்பட்டமான யுத்த நிறுத்த மீறலாகும் என விடுதலைப்புலிகள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

அத்தோடு, கைது செய்யப்பட்டுள்ள தமது போராளிகளின் உயிர்களுக்கு ஏதாவது ஆபத்து ஏற்படுமானால், அதற்கான முழுப் பொறுப்பையும் கடற்படையினரே ஏற்கவேண்டும் எனவும், அத்துடன் அது பாரிய பின்விளைவுகளை ஏற்படுத்தக் கூடியதெனவும் விடுதலைப்புலிகள் கண்காணிப்புக்குழுவிடம் தெரிவித்துள்ளனர்.

## கடற்படை காட்டிய பகுதியில் கப்பல் மூழ்கியதற்கான ஆதாரம் எதுவுமில்லை!

(கிளிநொச்சி)

சிறிலங்கா கடற்படையினர் விடுதலைப்புலிகளின் கப்பல் மூழ்கியதாகச் சுட்டிக்காட்டிய 110 கடல் மைல் தொலைவில் உள்ள பகுதியில் கப்பல் மூழ்கியதற்கான எந்த வித ஆதாரங்களும் கிடைக்கப் பெறவில்லை.

இது குறித்து விடுதலைப் புலிகளின் அரசியல்துறையினரின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் இரண்டு கண்காணிப்பாளர்களை ஏற்றியவாறு சென்ற சிறிலங்கா கடற்படையின் போறாப் படகு கரையிலிருந்து 110 கடல் மைல் தொலைவில் உள்ள ஓரிடத்தைச் சுட்டிக்காட்டி இப்பகுதியில் தான் புலிகளின் கலம் மூழ்கியதாகக் கண்காணிப்புக்குழுவினருக்குக் கூறியுள்ளனர். ஆனால் குறிப்பிட்ட பகுதியில் புலிகளின் கலம் மூழ்கியதற்கான எந்த ஆதாரமும் இருக்கவில்லை. இதனைத் தொடர்ந்து புலிகள் கரையிலிருந்து 266 கடல் மைலில் தொலைவில் புலிகளின் கலம் மூழ்கடிக்கப்பட்ட பிரதேசத்தை துல்லியமாக கண்காணிப்புக் குழுவினருக்குத் தெரிவித்தனர். பின்னர் புலிகளால் சுட்டிக்காட்டப்பட்ட இடத்திற்குச் சென்று நிலைமையை ஆராய்வதற்கு இரு கண்காணிப்பாளர்கள் அனுப்பப்பட்டனர் எனத் தெரிவிக்கப்

(08ஆம் பக்கம் பார்க்க)

## எக்கப்பலையும் சோதிப்பதற்கு கடற்படைக்கு அதிகாரம் உண்டு

### அமைச்சர் திலக்மாரப்பன

வடபகுதி கடற்பகுதிகளில் சர்வதேசத்திற்குள்ளாகும் எக்கப்பலையும் தடுத்து நிறுத்தி சோதனை செய்வதற்கு கடற்படையினருக்கு பூரண அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதென சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்துள்ளார். நேற்றுக்காலை புலிகளின் கப்பல் கடற்படையினரால் தாக்கி அழிக்கப்பட்டமையைத் தொடர்ந்து கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் உரையாற்றியுள்ளார். எவ்வழியாலும் ஆயுதங்களை இலங்கைக்குள் கொண்டுவருவதற்கு புலிகள் அனுமதிக்கப்படமாட்டார்கள் என அவர் மேலும் வலியுத்தியுள்ளார். புலிகளுக்கு ஆயுதங்களை ஏற்றிவரும் எக்கப்பலையும் தாக்கி அழிக்குமாறு கடற்படையினருக்கு பணிக்கப்பட்டுள்ளதாகக் கூறியுள்ளார்.

## ஈ.பி.ஆர்.எல்.எவ். வரதரணி சுபத்திரன் சுட்டுக்கொலை

(யாழ்ப்பாணம்)

ஈ.பி.ஆர்.எல்.எவ். வரதர் அணியைச் சேர்ந்த முக்கிய உறுப்பினர் ஒருவர் நேற்று யாழ்ப்பாணத்தில் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

றொபட் என அழைக்கப்படும் தம்பிராசா சுபத்திரன் (வயது-46) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டுள்ளவராவார்.

இவர் காலை 6. 45 மணியளவில் உடற்பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது சினைப்பர் தாக்குதலுக்கு இலக்காகி மரணமடைந்துள்ளார். ஈ.பி.ஆர்.எல்.எவ். வரதர் அணியின் [illegible] குழு உறுப்பினராகவும், [illegible] பெருமாளின் நம்பிக்கைக்குரியவராகவும் இருந்த இவர் யாழ் மாநகர சபையின் உறுப்

(08ஆம் பக்கம் பார்க்க)

## பலாலி வந்த அமைச்சர்கள் யாழ். செல்லாது உடன் திரும்பினர்!

யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த சிறிலங்காவின் பாதுகாப்புச் செயலர் ஒஸ்ரின் பெர்னாண்டோ மற்றும் சிறிலங்காவின் காணியமைச்சர் ராஜித சேனாரட்ன ஆகியோர் பலாலிக்கு வந்தவுடன் உடனே திரும்பிச் சென்றுள்ளனர்.

இவர்கள் நேற்றுக் காலை 9.30 மணியளவில் பலாலி விமான நிலை[illegible] வந்துள்ளனர். யாழ்ப்பாணத்தில் ஈ.பி.ஆர்.எல்.எவ். வரதர் அணியை சேர்ந்த ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டதைத் தொடர்ந்தே இவர்கள் திரும்பிச் சென்றுள்ளனர். இவர்கள் [illegible] நேற்று அரியா

(08ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சியில் படையினர் சோதனை நடவடிக்கை

ஈ.பி.ஆர்.எல்.எவ். வரதர் அணியைச் சேர்ந்த றொபேட் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து வடமராட்சிப் பகுதியில் நேற்றுக்காலை 8.00 மணி முதல் 2.00மணிவரை பிரதான நுழைவாயில் பகுதிகளில் படையினர் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

யாழ். பருத்தித்துறை வீதியிலும் வல்லை [illegible] சோதனை தடைமுகாமிலும் பருத்தித்துறை-சாவகச்சேரி வீதியில் தடைமுகாமிலும் மற்றும் கொடிகாமம் வீதியில் முள்ளி சோதனை தடைமுகா

(08ஆம் பக்கம் பார்க்க)

## பலாலியில் தரையிறங்கும்போது விபத்திற்குள்ளான விமானம்!

(லண்டன்)

பலாலி விமானத் தளத்தில் விமானப் படைக்குச் சொந்தமான அன்ரநோவ் விமானம் ஒன்று தரையிறங்கும் போது விபத்திற்குள்ளாகியுள்ளது.

நேற்று பிற்பகல் இடம்பெற்ற இந்த விபத்தில் விமானம் பலத்த சேதமடைந்துள்ளது.

[illegible] குறித்து விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு விமானப்படை அதிகாரிகளுக்கு விமானப்படைத் தளபதி உத்தரவிட்டுள்ளார்.

## பிரித்தானியாவுக்கு ரணில் விஜயம்

சிறிலங்காப்பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பிரித்தானியாவிற்குச் செல்லவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## விசேட புலனாய்வுப் பொலிசாரின் நடவடிக்கை அச்சமூட்டுகின்றது

### பிரதமரிடம் ஜோசப் பரராஜசிங்கம் முறையீடு

சிறிலங்காவின் விசேட புலனாய்வு பொலிசால் மட்டக்களப்பில் மேற்கொள்ளப்பட்டுவரும் கைது நடவடிக்கைகள் தொடர்பாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உபதலைவரான ஜோசப் பரராஜசிங்கம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் முறையிட்டுள்ளார்.

குடும்ப உறுப்பினர்களுக்கும் மட்டக்களப்பு பொலிசாருக்கும் உரிய அறிவித்தலைக் கொடுக்காமலேயே விசேட புலனாய்வுப் பொலிசார் கைது நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர்.

[illegible] புலனாய்வுப் பொலிசாரின் [illegible] நடவடிக்கையினால் மட்டக்களப்பு மக்கள் பெரும் அச்சத்திற்குள்ளாகியுள்ளனர் எனவும் ஜோசப் பரராஜசிங்கம் பிரதமருக்கு [illegible]ள்ளார்.

### விபரம் உள்ளே

முல்லைத்தீவு மாவட்டத்தில் தொண்டர் ஆசிரியர்களாகக் கடமை புரிந்து நிரந்தர நியமனம் பெறுவோரின் விபரம் 02ஆம் பக்கத்தில் பிரசுரமாகியுள்ளது.

# மதுபோதையில் வாகனம் செலுத்தியவருக்கு 1500 ரூபா அபராதம் விதிப்பு

(அலுவலக செய்தியாளர்)

மது போதையில் கனரக வாகனத்தினைச் செலுத்திய சாரதிக்கு தமிழீழ காவல்துறை வாகனப் போக்குவரத்துப் பிரிவினரால் 1500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

கடந்த சில தினங்களுக்கு முன் மதுபோதையில் கனரக வாகனத்தினை பிரதான வீதியில் செலுத்தியதை அவதானித்த காவல் துறையினர் வாகனத்தினை தடுத்து நிறுத்தியதுடன் சாரதியை வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்திய பொழுது மேற்படி சாரதி மதுபோதையில் இருப்பது ஊர்ஜிதப் படுத்தப்பட்டது. அதனையடுத்து காவல்துறையினரால் சாரதிக்கு 1500 ரூபா அபராதம் விதிக்கப்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)


## வரிவிளம்பரம்

### விவசாயிகளே!

உங்கள் வீட்டுத்தோட்டத்தை வளமாக்கத்தேவையான தென்னை, பலா, மாதுளை, எலுமிச்சை (தேசி), கமுகு, கொய்யா, கொடித் தோடை, தோடை,சவுக்கு மற்றும் பல தரமான நல்லின நாற்றுக்களைக் குறைந்த விலையில் நீங்கள் பெறுவதற்கு இன்றே நாடுங்கள். ஒருங்கிணைந்த மாதிரிப் பண்ணை, வட்டக்கச்சி. (3275)

### தவறிவிட்டது

சின்னத்தம்பி குணமணி என்பவருடைய பிரயாணப்பை முக்கிய ஆவணங்களுடன் நட்டாங்கண்டல் முகமாலை பஸ்ஸில் தவறவிடப்பட்டுள்ளது. அதைக்கண்டு எடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் ஒப் படைக்குமாறு வேண்டப்படுகின்றனர். (சி-8159)

### விற்பனைக்குண்டு

தரமான புழுக்கொடியல் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. தொடர்புகட்கு: வடமாகாண பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களின் பேரிணையம் (வெண்புறா நிறுவனத்திற்கு முன்பாக) கண்டிவீதி, கிளிநொச்சி. (சி-8159)


## இறுதி நாள் இன்று

முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியில் புதிதாக க.பொ.த. உயர்தர வகுப்புகளுக்கு இணையும் மாணவர்களுக்கான இறுதி நாள் இன்று என கல்லூரி அதிபரினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி வகுப்புகளுக்கு புதிதாக இணையும் மாணவர்களை இன்று பதிவுகளை செய்து கொள்ளுமாறு கல்லூரி அதிபர் கே.பி.கணேஸ் தெரிவித்துள்ளார். (ஆ)

## முல்லை. வலயத்தில் நிரந்தர நியமனம் பெற்ற தொண்டர் ஆசிரியர்களின் விபரம்

முல்லை. கல்விவலயத்தில் தொண்டர் ஆசிரியர்களாக கடமையாற்றியோரில் ஆரம்பக்கல்விக்கு 81 பேரும், விஞ்ஞானத்திற்கு இரண்டு பேரும் நிரந்தர நியமனம் பெற்றுள்ளனர்.

அவர்களின் பெயர் விபரம் வருமாறு:

எம்.சந்திரமதி-கோம்பாவில் விக்னேஸ்வரா, ஏ.திரேசாராணி-மன்னகண்டல் ஜி.ரி.எம்.எஸ், எஸ்.அருட்செல்வி-உடையார்கட்டு ம.வி, எம்.உதயசிறி-குரவில் த.வி, எஸ்.கனகேஸ்வரி-தேராவில் த.வி, ரி.எழிலரசி-தேராவில் த.வி, கே.றஜிதா-தேராவில் த.வி, ஆர்.சறோஜினிதேவி-தண்ணீரூற்று இந்து தமிழ் க.பாடசாலை, ரி.கருணாகரன்-அம்பலவன் பொக்கணை அரச த.க.பாடசாலை, பி.பத்மலதா - (விஞ்ஞானம்) புதுக்குடியிருப்பு ம.வி, ரி.ஜீவானந்-வள்ளிபுனம் அரச.த.க.பாடசாலை, எஸ். செல்வரத்தினதேவி- பாரதி வி., ஏ. சுவந்தி - உடுப்புக்குளம் அரச தமிழ் க. பாடசாலை, வை. சுகந்தமாலா- குரவில் த. வித்., கே. பிறமீலா- முள்ளிவாய்க்கால் மேற்கு அரச த. க.பா., கே. சிவானந்தி-அம்பலன்பொக்கணை அரச த.க.பாடசாலை, எஸ்.இந்திரன்-முல்லைத்தீவு ம.வி., எஸ். சுந்தரகுமாரி- அளம்பில் றோ.க., ரி. ரஜனி- பாரதி வி., ஈ. யோகாம்பிகை- வித்தியானந்தாக் கல்லூரி, எஸ். மனோ ரஞ்சிதம்-இருட்டுமடு த.வி., எஸ். கண்ணதாஸ்-விசுவமடு ம.வி., எஸ். தர்மினி-விசுவமடு மா.வி, பி.வசந்தி- உடுப்புக்குளம் அரச த.க.பா., எம். கவிதா-வற்றாப்பளை ம.வி:, எம். சகுந்தலாதேவி- வற்றாப்பளை ம.வி., வி. அஞ்சனாதேவி-கருனாட்டுக்கேணி அ.த.க.பா., எஸ். சித்திரலேகா-வள்ளிபுனம் ம.வி., எஸ். கீதாபத்மசிறி- வள்ளிபுனம் ம.வி.,கே செந்தில் வேல்-கலைமகள் அரச த.க.பா. , ஜே.அமலராணி-வள்ளிபுனம் ம.வி., வை. நிதி- வள்ளிபுனம் ம.வி., கே. வளர்மதி- வள்ளிபுனம் ம.வி., ரி.சுபோதினி- அரசரத்தினம் வித்தியாலயம், கே. பாக்கியவதி-குமுழமுனை ம.வி., கே. விஜிதா- குமுழமுனை ம.வி., ரி.சிவாஜினி-ஆறுமுகத்தான்குளம் அரச த.க.பா, எஸ்.சுதர்சனா- கலைமகள் அரச த.க.பா. கே. இந்திரகலா- உடுப்புக்குளம் த.வித்தியாலயம்,எஸ். பரமேஸ்வரன்-வித்தியானந்தாக்கல்லூரி, எஸ்.ஜெயவதனா- முள்ளியவளை அரச.த.க.பா., எஸ்.அன்னலட்சுமி-இருட்டுமடு த.வித்தியாலயம், வி.விக்னேஸ்வரராசா- செம்மலை ம.வி.,ஜி.தனேஸ்வரன் -செம்மலை ம.வி., ஏ.றொபின்சனா- அளம்பில் றோ.க, ஏ.சுதர்சினி- கள்ளப்பாடு அரச த.க.பா., கே.மஞ்சித்தா-அரசரத்தினம் வித்தியாலயம், பி.ஜே.எட்விசியா-இரணைப்பாலை றோ.க., ஆர்.பாமினி-தேவிபுரம் அரச த.க.பா, எப்.செல்வமலர்-புதுக்குடியிருப்பு றோ.க, எஸ்.கமலாம்பிகை-அம்பலவன் பொக்கணை, எஸ்.பிரசன்னா-விசுவமடு ம.வி., பி.கிருஷ்ணானந்தன்-அளம்பில் றோ.க, ரி.பாமினி-சிலாவத்தை, றோ.க, என்.சிறிகாந்தன்-முள்ளியவளை றோ.க, ரி.சொபிபாழின்-வலைஞர் மடம் அரச த.க.பா, கே.சபாஜிதன்-கொக்குத்தொடுவாய் அரச த.க.பா, என்.ஜெயவதனி-சிறிசுப்பிரமணியம் வி., ஏ.ஏ.ஜீவிதராணி-அளம்பில் றோ.க, எஸ்.செல்வநிலா-புதுக்குடியிருப்பு ம.வி., ஏ.அருணானந்தம்-பாரதி வி., எம்.எம்.ஜொசப்பின்-முல்லைத்தீவு றோ.க.த.பாடசாலை, எம்.கொன்சலா ருத்தினி-இரணைப்பாலை றோ.க, எஸ்.நளினி-வள்ளிபுனம்-கே.வி., கே. கருணாதேவி- இரணைப்பாலை றோ.க., எம்.தர்சினிமாலா- கொக்கிளாய் அரச த.க.பா., ஏ.வசந்தமலர் விஞ்ஞானம் வித்தியானந்தாக்கல்லூரி, எஸ்.தேவமணி- முள்ளியவளை றோ.க.த.வித், ரி.சிறிநந்தினி- விசுவமடு ம.வி.,பி.சந்திரகலா- சுதந்திரபுரம் அரச த.க.பா., கே.றேமன்- உடையார் கட்டு ம.வி.,எஸ்.சிவகௌரி- கொக்கிளாய் அரச த.க.பா.,கே.மதுரன் தேகன்- தேவிபுரம் அரச.த.க.பா, பி.சாந்தரூபன்-வற்றாப்பளை ம.வி., எஸ்.சிவரூபி-புதுக்குடியிருப்பு றோ.க., ஜே.சிறிதேவி-கலைமகள் வி, எம்.அனுசியா-வேணாவில்-சிறிமுருகானந்தா வி, ஏ.எம்.ஏ.கசில்டா-முள்ளிவாய்க்கால் மேற்கு கே.வி., ரி.கிருஷ்ணலதா-உடையார்கட்டு ம.வி., ஆர்.சுயாதினி-இருட்டுமடு அரச.த.க.பா., எஸ்.திவரங்கன்-தேவிபுரம் அரச.த.க.பா., எஸ்.சந்திரகுமாரி-கேப்பாப்புலவு அரச.த.க.பா, எஸ்.குமுதினி-கொக்கிளாய் அரச.த.க.பா.


## இளவரசி புடவை மாளிகை

### இடமாற்றம்



புதுக்குடியிருப்பு சந்தியில் இயங்கி வரும்

இளவரசி புடவை மாளிகை (விமல்)

திருத்த வேலைகள் மேற்கொள்ளவுள்ளதால் 16.06.03 திங்கள் முதல் புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்கு முன்பாக இயங்கும் என்பதை வாடிக்கையாளர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் அறியத் தருகிறேன்.

உரிமையாளர்,
இளவரசி புடவை மாளிகை
புதுக்குடியிருப்பு.

(சி-7752)


## கொடுப்பனவு வழங்கல்

கரைத்துறைப் பற்று உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட முள்ளியவளை கிழக்கு கிராம சேவையாளர் பிரிவு மக்களுக்கு மீள்குடியமர்வு முதற்கட்ட கொடுப்பனவான 25000 ரூபா வழங்கப்பட்டதையடுத்து முள்ளியவளை தெற்கு கிராம சேவையாளர் பிரிவுக்கான மீள்குடியமர்வு முதற்கட்ட கொடுப்பனவு தற்போது வழங்கப்பட்டு வருகின்றது. (ஆ)

## விளையாட்டு விழா

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் லண்டன் கிளையின் அனுசரணையுடன் சமூக மேம்பாட்டு நிறுவனம் நிர்வகிக்கும் இரணைமாதாநகர் முழங்காவில் சொக்கலிங்கம் சிறுவர் கல்வி ஊட்டமேம்பாட்டுப் பூங்காவின் ஐந்தாம் ஆண்டு நிறைவுவிழாவும் விளையாட்டு விழாவும் நாளை பிற்பகல் 2.30 மணிக்கு பூங்கா மைதானத்தில் நடைபெறவுள்ளது.

## வாகன விபத்தில் 19 பேர் காயம்

தம்புள்ளையில் நேற்று ஏற்பட்ட வாகன விபத்தில் 19 பேர் காயமடைந்துள்ளனர். காயமடைந்த 19 பேரும் மருத்துவ மனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ள போதிலும் பலரது நிலைமை மோசமாகவுள்ளதாகவும் கூறப்படுகின்றது. இவ்விபத்து தொடர்பான விசாரணைகளை தம்புள்ளைப் பொலிசார் மேற்கொண்டுள்ளனர்.

## மீள்குடியேறிய மக்களுக்கு காணி உரிமைப் பத்திரம் வழங்கல்

நேற்றுக் காலை 10. 00 மணிக்கு வவுனியா மதகுவைத்தகுளப் பகுதியில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட 100 குடும்பங்களுக்கான காணி உரிமைப் பத்திரம் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

இதில் வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன், மகளிர் பொறுப்பாளர் அலை, அரசாங்க அதிபர் கணேஸ், பிரதேச செயலர் சத்தியசீலன் ஆகியோர் கலந்து கொண்டு பத்திரங்களைக் கையளித்து உரை நிகழ்த்தியுள்ளனர்.

இந்நிகழ்வு மதகுவைத்தகுள மீள்குடியேற்றத் தலைவர் திரு. அரயுராசா தலைமையில் நடைபெற்றுள்ளது.

## 'என் இதயநாதம்' கேட்பொலிப்பேழை தாளையடியில் அறிமுக விழா

தாளையடியைச் சேர்ந்த ஏ.ஆர். விஜயகுமார் இயற்றி இசையமைத்துப் பாடிய கிறிஸ்தவப் பாடல்கள் அடங்கிய "என் இதய நாதம்" கேட்பொலிப் பேழை அறிமுக விழா நேற்று முன்தினம் தாளையடி புனித அந்தோனியார் ஆலயத்தில் நடைபெற்றது.

தாளையடி பங்குத்தந்தை வண பிதா பிரான்ஸ்சிஸ் அடிகளார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வடமராட்சி கிழக்கு ப.நோ.கூ. சங்கத்தின் பொதுமுகாமையாளர். சிறிராமச்சந்திரன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டார்.

நிகழ்வில் சிறப்புரைகளை தாளையடி கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் க.ம.ஜோசப் வடமராட்சி கிழக்கு கடற்புலிகளின் அரசியல் துறை மக்கள் தொடர்பாளர் யாழ் மன்னன், ப.நோ.கூ. சங்கத்தின் பொது முகாமையாளர் சிறிராமச் சந்திரன் ஆகியோர் நிகழ்த்தினர். தொடர்ந்து மதிப்பீட்டுரையினை அருட் தந்தை வின்சன் அடிகளார் நிகழ்த்தினார். தொடர்ந்து கேட்பொலிப் பேழையின் முதற் பிரதியை அருட்சகோதரி மாறிலூகிஸ் வெளியிட்டுவைக்க தாளையடியைச் சேர்ந்த அ.மத்யூஸ் பெற்றுக்கொண்டார். (11)

## சிறுவர் இல்லங்களின் ஆண்டு நிறைவு விழாக்கள்

(அலுவலக செய்தியாளர்)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் நடாத்தப்பெற்றுவரும் சிறுவர் இல்லங்களின் ஆண்டு நிறைவு விழாக்கள் வெகுசிறப்பாக நடைபெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சிறுவர் இல்லங்களான குருகுலம், காந்தி நிலையம் என்பன எதிர்வரும் 23ஆம் திகதியன்று முறையே 43ஆம், 46ஆம் ஆண்டுகளை நிறைவு செய்கின்றமையினையடுத்து மேற்படி நிறைவு விழாவினை த.பு.கழகம் விமரிசையாகக் கொண்டாடவுள்ளது.

மேற்படி சிறுவர் நிலையங்கள், அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, மலேசியா தபு. கழக ஆதரவுடன் இயங்கி வருகின்றது.

குருகுலம் சிறுவர் இல்லத்தில் 507 பெண் பிள்ளைகளும், காந்தி நிலையம் சிறுவர் இல்லத்தில் 169 ஆண் பிள்ளைகளும் தங்கவைக்கப்பெற்று பராமரிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## தட்டுவன்கொட்டியிலுள்ள வீடுகளின் கற்கள் திருடப்படுவதால் கவலை

(கண்டாவளை)

கிளி. மாவட்டத்திலுள்ள தட்டுவன்கொட்டிப் பகுதியிலுள்ள வீடுகளின் கற்கள், அத்திவாரக் கற்கள் என்பன சிலரால் உழவு இயந்திரம் மூலம் எடுத்துச் செல்லப்படுவதால் அப்பகுதி மக்கள் கவலையடைந்துள்ளனர்.

இப்பகுதியிலிருந்து 300 குடும்பங்கள் இராணுவ ஆக்கிரமிப்புக் காரணமாக அயல் கிராமங்களில் தஞ்சமடைந்தனர். இங்கு இராணுவத்தினர் புதைத்துவிட்டுச் சென்ற மிதிவெடி, கண்ணிவெடிகளால் அம்மக்கள் மீண்டும் சொந்த இடங்களுக்குச் செல்ல முடியாது உள்ளனர்.

இந்நிலையில், சிலர் வீட்டு கற்களையும், அத்திவாரக் கற்களைக் கூட கிளறி உழவு இயந்திரங்கள் மூலம் எடுத்துச் சென்று விற்று வருகின்றனர்.

இதனைத் தடுத்து நிறுத்துமாறு தட்டுவன்கொட்டி கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர். (14)

## மட்டு. செல்கிறார்

பிரதமரின் ஆலோசகர் வீரக்கோன் இன்று மட்டக்களப்பிற்குச் செல்லவுள்ளார்.

பிரதமரின் செயலகத்தினால் அமுல்படுத்தப்பட்டு வருகின்ற நிவாரணம், புனர்வாழ்வு, மீள் ஒன்றிணைப்பு ஆகிய திட்டம் தொடர்பாக ஆராயும் கூட்டத்தில் கலந்து கொள்ளும் பொருட்டு இவர் மட்டக்களப்பு செல்லவுள்ளதாக மாவட்ட அரச அதிபர் ஆர். மோகன குருசாமி கூறியுள்ளார்.

## சுதந்திரக் கட்சி - ஜே.வி.பி பேச்சுக்கள் தொடரும்

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையில் நேற்று முன்தினம் மீண்டும் ஒரு சந்திப்பு இடம் பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பின் போது இரு கட்சிகளுக்கும் இடையிலான கூட்டு இணைப்பை ஏற்படுத்துவதில் உள்ள சிக்கல்கள் குறித்து ஆராயப்பட்டுள்ளது. இரு கட்சிகளும் கூட்டிணைவது குறித்து பல மாதங்களாகப் பேச்சுவார்த்தைகளை நடாத்தி வருகின்ற போதிலும் இது வரையிலும் இரு தரப்பினருக்கும் இடையில் பூரண இணக்கம் காணப்படாமை குறிப்பிடத்தக்கது.

இந்தச் சந்திப்பிலும் கூட்டிணைவது தொடர்பாகத் தொடர்ந்தும் பேச்சுக்களை மேற்கொள்வது என்று முடிவு எடுக்கப்பட்டுள்ளது.


## 5 ஏக்கர் தென்னங்காணி கொள்வனவு செய்தல்

கற்சிலைமடு ஒட்டுசுட்டானில் அமைந்துள்ள முல்லை. மாவட்ட சி.க.கூ.சமாசம் 5 ஏக்கர் தென்னங்காணியை முல்லை. மாவட்டத்தின் எல்லைக்குட்பட்ட பகுதியில் கொள்வனவு செய்யவுள்ளது.

அதனை விற்கத் தயாராக உள்ளோர் 2003.06.28 ஆம் திகதியோ அல்லது அதற்கு முன்போ தங்கள் காணியின் அமைவிடம் சரியான முகவரியுடனும், காணியின் அளவு விற்கத்தயாராகவுள்ள விலை போன்ற விபரங்களுடன் எழுத்து மூலமாகவோ நேரிலோ தொடர்பு கொள்ளவும்.

தகவல்: மாவட்டச் செயலாளர்
சி.க.கூ.சமாசம்,
கற்சிலைமடு, ஒட்டுசுட்டான்.

(3232)

# மதசார்பான ஆட்சியைக் கண்டித்து ஈரானில் ஆர்ப்பாட்டங்கள் அதிகரிப்பு!

## அமெரிக்கா பின்நிற்பதாகக் குற்றச்சாட்டு

(தெஹ்ரான்)

**ஈரானில் மத சார்பான ஆட்சியை ஆட்சேபித்து ஆர்ப்பாட்டங்கள் பரவலாக இடம்பெற்று வருகின்றன. இந்த ஆர்ப்பாட்டங்கள் அதிகரித்துச் செல்வதாக தெஹ்ரானிலிருந்து வெளியாகும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இத்தகைய ஆர்ப்பாட்டங்களின் பின்னணியில் அமெரிக்கா இருப்பதாக ஈரானிய அரசு குற்றம் சாட்டியுள்ளதுடன் அதற்குக் கண்டனமும் தெரிவித்துள்ளது.**

மேலும் போராட்டங்களைக் கட்டுப்படுத்த கடுமையான நடவடிக்கைகள் பிரயோக்கிக்கப்படும் என்றும் ஈரானிய அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது.



தெஹ்ரானில் மாணவர்களின் ஆர்ப்பாட்டம் தீவைப்பில் முடிந்த சம்பவத்தில் தீயினால் எரிந்த பகுதிகளுக்கு ஊடாக கடந்துசெல்லும் ஈரானியப் பெண்

மத சார்பான ஆட்சியை எதிர்த்து ஆர்ப்பாட்டங்கள் செய்த குழுக்கள் மீது நேற்று அதி காலை பொலிசாரும், விழிப்புக்குழு உறுப்பினர்களும் தாக்குதல் நடத்தியுள்ளார்கள்.

ஐந்து நாட்களுக்கு முன்னர், சனநாயக ஆதரவு ஆர்ப்பாட்டங்கள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் நேற்று அதிகாலை ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும், பொலிசாருக்குமிடையே மோதல் உக்கிரமடைந்ததாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இந்த ஆர்ப்பாட்டங்களின் போது இளம் பெண்கள் வாகனங்களுக்குள் இருந்து வெளியே இழுக்கப்பட்டு தாக்கப்பட்டுள்ளார்கள்.

இஸ்லாமிய போராளிகள் சுமார் 100 பேர்வரையில் சீருடை எதுவுமின்றி ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்தியதை நேரில் கண்டதாக ராய்ட்டர் செய்தி தெரிவிக்கின்றது.

கலவரத்தின்போது துப்பாக்கிப் பிரயோகங் களும் இடம்பெற்றதாகவும் கூறப்படுகின்றது.

இதேவேளை ஈரானில் அணுவாயுதங்களை உற்பத்தி செய்வதாகக் குற்றம் சாட்டிவரும் அமெரிக்கா இந்த ஆர்ப்பாட்டங்களை வரவேற்றுள்ளது.

## ரஷ்யாவின் முயற்சி

(மொஸ்கோ)

பயங்கரவாத நடவடிக்கைகள் குறித்து இந்தியத் தலைவர்களுடன் ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

இதன் முதற்கட்டமாக பாகிஸ்தான் செல்லவுள்ளார், அடுத்து இந்தியா சென்று, பிரதமர், வெளிவிவகார அமைச்சர், பாதுகாப்பு அமைச்சர் ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.



அமெரிக்க ரோந்து வாகனத்துக்கு அருகில் தமது மந்தைகளை ஓட்டிச் செல்லும் ஈராக்கியர்

## சார்ஸ்நோய் அச்சுறுத்தல் சீன தலைநகரில் அகலவில்லை!

பயங்கரமான சார்ஸ் நோய் காரணமாக சீனாவின் நான்கு பகுதிகளுக்குச் செல்வதற்கு விடுக்கப்பட்டிருந்த பயணக்கட்டுப்பாடுகளை நேற்று முன்தினம் உலக சுகாதார நிறுவனம் நீக்கி விட்டது. எனினும் பீஜிங்கிலும், தாய்வானிலும் இன்னமும் சார்ஸ் நோய் கட்டுப்படுத்தப்படாமல் இருப்பதால், அங்கு செல்வதற்கான பயண எச்சரிக்கைகள் விலக்கப் படவில்லை.

கனடாவில் சார்ஸ் மீண்டும் தொடங்கியிருப்பதால் சுகாதார அதிகாரிகள் விழிப்பு நிலையைக் கைவிடக் கூடாது என்றும் உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரித்துள்ளது.



ஸ்பெயின் பிரதமருக்கெதிராக ஆர்ப்பாட்டம் நடத்தும் கியூபா மக்கள் ஸ்பெயின் தூதரகத்துக்கு ஊர்வலமாகச் செல்கின்றனர்.

## பேரழிவு ஆயுதங்களைக் கண்டறிய தடுத்து வைக்கப்பட்டுள்ளோர் தகவல்!

### அமெரிக்கப் படையதிகாரி கூறுகிறார்

(வாஷிங்டன்)

ஈராக்கில் கைது செய்யப்பட்டவர்கள் பேரழிவைத்தரும் ஆயுதங்களைக் கண்டுபிடிக்கக் கூடிய இடங்கள்பற்றி தகவல் தெரிவித்து வருவதாக அமெரிக்கா கூறியுள்ளது.

ஈராக்கில் ஏற்கனவே கைது செய்யப்பட்டுள்ள பலர் பேரழிவு ஆயுதங்களைக் கண்டுபிடிக்கக் கூடிய இடங்கள் பற்றி அமெரிக்க விசாரணையாளர்களுக்கு தெரிவித்துள்ளார்கள் என்று அமெரிக்கத் தரைப்படைத் தலைமை அதிகாரி தெரிவித்துள்ளார்.

எனினும் இந்த இடங்களில் தற்போது தேடுதல் நடவடிக்கை மேற்கொள்வதில்லை என அமெரிக்க அதிகாரி தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஈராக்கின் பலபகுதிகளிலுள்ள ஈராக்கியர்கள் நாட்டின் சட்டத்தையும், ஒழுங்கையும் ஸ்திரமான நிலையையும் நிலை நாட்டுவதற்கு ஒத்துழைப்புதர முன்வந்துள்ளதாகவும் செய்தியாளர்கள் மத்தியில் அமெரிக்க அதிகாரி கூறியுள்ளார்.

பேரழிவைத் தரும் ஆயுதங்களைப் பொறுத்தவரை பல வருடங்களாக அத்தகைய ஆயுத உற்பத்தி மிக ரகசியமாக நடைபெற்று வந்ததால் அது பற்றி அறிந்துள்ள ஈராக்கியர்கள் மிகமிகக் குறைவாகவே இருக்கின்றார்கள் என்றும் அவர் கூறியுள்ளார்.



பாக்தாத்தில் சனாதிபதி மாளிகைக்கு அருகில் அமெரிக்கப் படையினர் ஈராக்கியர் ஒருவரைச் சோதனையிருகின்றனர்.

## தாக்குதல்களைக் கைவிட இருதரப்புக்கும் அமெரிக்க நிர்வாகம் வேண்டுகோள்

### -மத்திய கிழக்கு முயற்சிகள் பின்னடையலாம்

பலஸ்தீன தாக்குதல்களுக்கு எதிராக பழிக்குப் பழி வாங்கும் நடவடிக்கைகளில் இஸ்ரேல் ஈடுபடக் கூடாது என்று அமெரிக்க வெளிநாட்டமைச்சர் கொலின் பவல் கோரிக்கை விடுத்துள்ளார்.

இஸ்ரேலியர்களுக்கு எதிரான பயங்கரவாத நடவடிக்கைகளை நிறுத்த வேண்டும் என்றும் இவர் பலஸ்தீனர்களிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இருதரப்பினரும் அமைதியைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று தெரிவித்த இவர், பயங்கரவாதத்தை தவிர்த்துக் கொள்வது முக்கியமானது என்றும் கூறியுள்ளார்.

2005 ஆம் ஆண்டில் பலஸ்தீன ராஜ்யம் ஒன்றை அமைப்பதற்கான அமெரிக்காவின் சமாதானத் திட்டம், தற்போதைய வன்முறைகளால் கேள்விக் குறியாகியுள்ளது.இஸ்ரேலை அழித்துவிடப் போவதாகச் சூளுரைத்துள்ள கமாஸ் இயக்கத்திற்கு எதிராகப் போர் தொடுத்துள்ளதாக இஸ்ரேல் நேற்று முன்தினம் அறிவித்துள்ளது.

காஸா நகரில் இஸ்ரேலிய யுத்த விமானங்கள் நேற்று முன்தினம் நடத்திய தாக்குதலில் கமாஸ் இயக்கப்போராளி குவாத் அல் ஜிதாவி கொல்லப்பட்டுள்ளதுடன், 23பேர் காயமடைந்துள்ளார்கள்.

## அல்–ஹெய்தாவின் புதிய தளமாக பாகிஸ்தான் மாறிவிட்டது

### அத்வானி குற்றச்சாட்டு

அல்-ஹெய்தா பயங்கரவாத அமைப்பின் புதிய தளமாக பாகிஸ்தான் மாறிவிட்டது என்று துணைப்பிரதமர் அத்வானி கூறியுள்ளார்.

சர்வதேச பயங்கரவாதத்திற்கு ஊக்கமும், நடவடிக்கை ஆதரவும் பாகிஸ்தானில் இருந்துதான் முக்கியமாகக் கிடைக்கின்றது என்பது அனைவரும் அறிந்ததே என்று சிக்காகோவில் நடைபெற்ற நிகழ்ச்சியொன்றில் பேசுகையில் அத்வானி கூறியுள்ளார்.பாகிஸ்தானில் இருந்துகொண்டு இந்தியாவுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடும் குழுக்களுக்கு அல்-ஹெய்தா அமைப்புடன் தொடர்பு உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.ஆனால் அத்வானியின் இந்தக் குற்றச்சாட்டை பாகிஸ்தான் மறுத்துள்ளது.

## திபெத்தியர்கள் நாடு கடத்தல்: ஐரோப்பிய ஒன்றியம் கவலை!

சட்டவிரோதமாக நுழைந்தோர் என்று கூறி 18 திபெத்தியர்களைச் சீனாவுக்கு திருப்பியனுப்பிய நேபாள அரசின் முடிவை ஐரோப்பிய யூனியன் கண்டித்துள்ளது.கூடுதலாகப் பெண்களும் சிறுவர்களுமான இந்தத் திபெத்தியர்கள் கடந்த மாதம் 31ஆம் திகதி சீனாவுக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

அடைக்கலம் தேடிவந்த குழுந்தைகளை இவ்வாறு வெளியேற்றுவது மானிட நெறிகளையும், சர்வதேச சட்டத்தையும் மீறிய செயல் என்று ஐரோப்பிய யூனியனின் தலைமைப் பொறுப்பிலுள்ள கிரேக்க அரசு அறிக்கையில் கூறியுள்ளது.




- ஜெயந்திரன்

# விளையாட்டுக்களில் பெண்களின் பக்கம்

உருதூர் சிவன்

இன்று பெண்ணியம் சார்பாக பல்வேறு ஊடகங்களும் பல்வேறு வகையான கருத்து நிலைகளை எடுத்துக் கூறுகின்றன. அதில் முக்கியமாகப் பெண்களுக்கு சம உரிமை மறுக்கப்பட்டமையும் அடங்கும். இச்சம உரிமை விளையாட்டுக்களில் பண்டைக் காலத்தில் பேணப்படவில்லை என அறிய முடிகிறது.




கிரேக்க நாட்டில் தொடங்கிய விளையாட்டு பெரு நிகழ்வில் ஆரம்பத்திலிருந்தே பெண்கள் ஒரு பொருட்டாகக் கருதப்படவில்லை. ஆனால் இத்தடை மணமான பெண்களுக்கு மட்டும் தான் என்றில்லை. கன்னிப்பெண்களுக்கும் கூட. ஆயினும் விலை மாதர்கள் மட்டும் அனுமதிக்கப்பட்டனர். இவ்வாறு பெண்கள் ஓரங்கட்டப் பட்டாலும் சில பெண்களின் தீவிர செயற்பாடுகளினால் ஒலிம்பிக் சரித்திரத்தில் பெண்களுக்குச் சம்பியன்கள் பற்றிய பதிவுகள் இல்லாமலில்லை "கள்ளிப் பற்றீயா" என்னும் பெண்மணி ஒலிம்பிக் குத்துச்சண்டைப் பயிற்சியாளராக இருந்ததாக ஒரு தகவல் தெரிவிக்கின்றது. இவர்தான் முதன் முதல் பெண்கோச் என்றும் சொல்லப் படுகின்றது.

"கைனிஸ்கா" என்னும் ஸ்பாட்டன் இளவரசி முதல்பெண் ஒலிம்பிக் சம்பியனாகக் குறிப்பிடப்படுகின்றார். குதிரைகளைப் பழக்குவதில் கில்லாடியாக இருந்தாராம்இவர். இவரின் குதிரைகள் ஒலிம்பிக் பந்தயத் தேரோட்டப்போட்டிகளில் வெற்றி பெற்றதாகவும் தகவல்கள் கூறுகின்றன.

பழைய கால ஒலிம்பிக்கில்தான் இப்படியென்றால் நவீனகால ஒலிம்பிக்கிலும் மங்கையர்களின் நிலை மாறிவிடவில்லை. 1896இல் நடந்த முதல் ஒலிம்பிக்கில் நோ லேடிஸ் என்று கட்டாயமாக கூறி விட்டார்கள். அதன் பின்னர் 1900இல் நடந்த இரண்டாவது நவீன ஒலிம்பிக்கில் தான் பெண்களும் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். அதுவும் ஒப்புக்கு சப்பாணிபோல் டெனிஸ், கோல்போட், வில்வித்தை எனும் மூன்று விளையாட்டுக்களில் மட்டும்தான். இதிலும் கூட இந்த மூன்றாவது விளையாட்டில் நிறைய சர்ச்சைகள் இருக்கின்றது.

எது எப்படியோ ஒலிம்பிக்கில் பெண்கள் வேண்டாத விருந்தினர்களாகவே இருந்தனர்.

2000ஆம் ஆண்டில் ஒலிம்பிக் ஒரு வித்தியாசமான மன உணர்வுகளைத் தோற்றுவித்தது. புது நூற்றாண்டுவிழாவா ஒலிம்பிக் விழாவா என அனைவரையும் வியக்கவைத்தது. இந்த வியப்பினால் பெண்களின் ஊடுருவலை யாரும் பொருட்படுத்த வில்லைப் போலும். எனினும் பெண்கள் ஒலிம்பிக்கின் கண்கள் என நினைக்கும் அளவிற்கு மாற்றம் ஏற்பட்டு விட்டது. இருந்தும் இப்போது கூட ஆண்களைவிட பெண்கள் ஒரு படி மட்டம் என்று கருதப்படும் நிலை இருப்பதாக போர்க் கொடி தூக்கும் பெண்ணியவாதிகள் இருக்கத்தான் செய்கிறார்கள்.



இது ஒருபுறம் இருக்க இன்னமும் பெண்களை தங்கள் நாட்டு அணியில் சேர்த்துக் கொள்ளாத முஸ்லிம் நாடுகளும் இருக்கின்றன. அல்ஜீரிய நாட்டு வீராங்கனை ஹஸீபா பவுஸ்மெர்க்க ஒலிம்பிக்கில் பங்கேற்று தங்கம் பெற்ற போது திறந்தகாலுடன் ஓடி அசிங்கப்படுத்தினார் என்று அந்த நாட்டு அடிப்படைவாதிகள் அவரைத் தூற்றியதுடன் கல் எடுத்து அடித்ததும் சோகமானவரலாறு.

சிட்னி ஒலிம்பிக்கில் மகளிர் சாதனை பெரிதாகப் பேசப்பட்டன. அமெரிக்காவின் மரியன் ஜோன்சும், அவுஸ்திரேலியாவின் "கோத்தேஃப்மேனும்" இதற்குச் சான்று எமது நாட்டைப் பொறுத்தவரை விளையாட்டு பண்மடங்கு வளராவிட்டாலும் கிராமப்புறத்தைச் சேர்ந்த கீழ்த்தரமட்ட குடும்பத்தில் உருவாகிய ஆசியக் கருங்குயில் என அழைக்கப்படும் குறுந்தூர ஓட்டவீராங்கனை சுசந்திகா ஜெயசிங்க போன்றவர்கள் தங்களின் கடின உழைப்பால் பெண்ணியத்தால் சாதிக்க முடியும் என்பதை நிலைநிறுத்தியவர்கள். அதே போல எமது தமிழீழத்தில் (முன்பு இலக்கியங்களில் பேசப்பட்ட தமிழ்ப் பெண்களைவிட) பெண்களின் சாதனைகள் வியக்கத்தக்கது. உலகின் பெண்களுக்கு முன்னுதாரணமாக பேசக்கூடிய அளவுக்கு அவர்களின் வீரச்செயல்கள் நிகழ்த்தப்பட்டன. எவ்வாறாயினும் இன்று ஆண்களுக்கு நிகராக பெண்களும் சரிநிகர் சமமாக மதிக்கப்படுதல் ஏற்பட்டுள்ளது. எனவே எமது தாயகப் பெண்களும் கடின உழைப்பு, தீவிர பயிற்சி மூலம் விளையாட்டுக்களில் ஈடுபட்டு சாதனை படைக்க வேண்டும் என்பது எமது பலரின் விருப்பாகும்.

# இந்தியாவுடனான தோல்வியை மறக்க முடியவில்லை எதிர்கொள்ள விரும்புகிறார் அக்ரம்

பாகிஸ்தான் அணியின் வேகப்பந்து வீச்சாளரும், சாதனை வீருமான வசீம்அக்ரம் தனது கடைசிப் போட்டியை சொந்த மண்ணில் இந்திய அணியுடன் மோதி வெற்றி பெற வேண்டும் என விருப்பம் கொண்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.



அண்மையில் ஓய்வை அறிவித்த அக்ரம் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை விடுத்த பிரிவு உபசார அழைப்பை ஏற்றுக்கொண்டபோதே இதனைத் தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்காவில் நடைபெற்ற உலகக்கிண்ண போட்டியில் 500வது விக்கெட்டை வீழ்த்தி சாதனை படைத்தார் வசீம் அக்ரம். ஆனாலும் அவரைச் சார்ந்த பாகிஸ்தான் அணி படுதோல்வி அடைந்தது.

இந்நிலையில் அணியின் செயற்பாடுகளில் அதிருப்தி அடைந்த பாகிஸ்தான் கிரிக்கெட் சபை மூத்த வீரர்கள் அனைவரையும் ஒட்டுமொத்தமாக அணியில் இருந்து தூக்கி எறிந்தது. இதில் அக்ரமும் உள்ளடக்கப்பட்டார்.

500 விக்கெட்டுக்களை வீழ்த்தி நாடு திரும்பும் தனக்கு உற்சாகமான வரவேற்பு இருக்கும் என்று நினைத்தவருக்கு அணியில் இருந்து தூக்கி எறியப்பட்டமை அதிர்ச்சியைக் கொடுத்தது. அந்த சோகத்தில் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வை அறிவித்தார் அக்ரம்.

இந்நிலையில் அவரைக் கௌரவப்படுத்தும் முகமாக அக்டோபர் மாதம் தென்னாபிரிக்கா அணியுடனான போட்டியில் பாகிஸ்தான் அணியில் அக்ரம் சேர்த்துக் கொள்ளப்பட்டு அப்போட்டியின் முடிவில் பிரமாண்டமான ஹரியனுப்பும் வைபவம் இடம் பெறும் என்று கிரிக்கெட்சபை அறிவித்தது. இது அக்ரமின் மனச்சோர்விற்கு மருந்தளிப்பதாக அமைந்துள்ளது.

இம் மகிழ்ச்சியான செய்தியை தொடர்ந்து அக்ரம் தெரிவிக்கும்போது;

கிரிக்கெட்டை நான் முதன் முதலில் தொடங்கிய மண்ணில் எனது கடைசி ஒரு நாள் போட்டியை விளையாடுவது அற்புதமான உணர்வாக இருக்கும். இதுபோன்ற வாய்ப்புக்கள் அமைவது அபூர்வம். அதற்கு இன்னும் நான்கு மாதங்கள் உள்ளன. ஆனாலும் நான் காத்திருக்கத் தயார். இதேசமயம் எனக்குக் கிடைத்த மற்றுமொரு செய்தி இன்னும் உற்சாகமடையச் செய்துள்ளது. இந்தியாவுடன் உறவுகள் சீராகிவருவதும் அந்த அணி செப்டெம்பர் மாதம் எங்கள் நாட்டுக்குச் சுற்றுப் பயணம் வர இருக்கும் செய்திதான்.

அப்படி ஒரு போட்டி நடக்கும் பட்சத்தில் இந்தியாவை எதிர்த்து விளையாடும் பாகிஸ்தான் அணியில் எனக்கு இடம் கிடைத்தால் ஒரு கனவு நனவானதாகவே கருதுவேன். உலகக்கிண்ணப் போட்டியில் இந்திய அணியுடன் ஏற்பட்ட தோல்வியை இன்னும் என்னால் மறக்கமுடியவில்லை. இன்னும் ஒரேயொரு வாய்ப்புக் கிடைக்குமானால் நிச்சயமாக ஒரு வெற்றியுடன் எனதுகிரிக்கெட் வாழ்க்கையை முடித்துக்கொள்வேன் என அக்ரம் தெரிவித்தார்.

# கனவுநாயகனாக உலாவரும் பெக்காம்

இங்கிலாந்து உதைபந்தாட்ட அணியின் தலைவரும் மான்செஸ்டர் யுனைட்டட் கழகத்துக்காக பல ஆண்டுகளாக விளையாடி வருபவருமான டேவிட் பெக்காம் உலக நாடுகளுக்கான சுற்றுப் பயணங்களை மேற்கொண்டு ரசிகர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தி வருகிறார்.

26 வயதுடைய பெக்காம் ஜப்பானும் கொரியாவும் இணைந்து நடத்திய 2002 உலகக்கிண்ண உதைபந்தாட்டத்தின் போது விளையாட்டைப் பார்த்து ரசித்த ரசிகர்களுக்கு விருந்தாக அமைந்தது. இந்நிலையில்



அவரது தற்போதைய விஜயம் அவர்களை ஆவலுடன் எதிர்பார்க்கும் அளவிற்கு முக்கியத்துவத்தை ஏற்படுத்தியுள்ளது.

உலகக்கிண்ணப் போட்டியில் இங்கிலாந்து அணியே இறுதிப் போட்டிவரை முன்னேறும் என அன்று எதிர்பார்க்கப்பட்ட போதும் அணி எதிர்பார்த்த அளவிற்கு சோபிக்க தவறியதால் பெக்காமின் அற்புத ஆட்டத்தை தொடர்ந்து காணும் வாய்ப்பை ரசிகர்கள் இழந்தனர்.

இந்நிலையில் உதைபந்தாட்டத்தில் அதிக மோகம் கொண்ட ரசிகர்கள் ஏமாற்றம் அடைந்தனர். இதில் ஜப்பானிய ரசிகர்கள் முன்னிலை பெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதற்காக இங்கிலாந்து அணி இறுதிப் போட்டிவரை நீடிக்க வேண்டும் என்பது போன்ற இவர்களது கனவும் நனவாகாமல் போனது.

இவர்களது ஏமாற்றத்தைப் போக்கும் வகையில் சொந்த மண்ணில் வைத்து பெக்காமை மீண்டும் காணும்வாய்ப்பை ஜப்பானிய பிரபல நிறுவனங்களான மேஜி சீக்கா மற்றும் டி.பி.சி. ஆகியன ஏற்படுத்திக் கொடுத்துள்ளன.

துடிப்பான விளையாட்டு, கவர்ச்சியான ஹெயார் ஸ்டைல் மூலம் ஜப்பானிய உதைபந்தாட்ட ரசிகர்களைக் கவர்ந்த பெக்காம் ஜப்பான் ரசிகர்களை மகிழ்ச்சிப்படுத்தும் வகையில் அங்கு செல்வார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

உலகில் அதிக ஊதியம் பெறுவதில் முன்னிலையில் திகழும் உதைபந்தாட்ட வீரரான பெக்காம் தற்போது திரைப்பட நடிகர்கள் போன்று ஸ்டைல் செய்து ரசிகர்களை மகிழ்ச்சிப்படுத்தி வருகின்றமை அனைவரையும் கவர்ந்துள்ளது.

இது இவ்வாறிருக்க மான்ஸ்செஸ்டர் கழகத்தில் இருந்து தான் விலகப்போவதாக பெக்காம் அறிவித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

# சிறிலங்காவில் தோன்றியுள்ள சூழ்நிலைகளால் சர்வதேசம் சந்தேகம் கொள்கிறது!

சிறிலங்காவுக்கு நன்கொடை வழங்கும் மாநாடு நடந்து முடிந்துள்ளது. இம்முறை வழங்கப்பட்டுள்ள பாரிய உதவி மக்களுக்கு உச்ச பயனைக் கொடுக்கும் வகையில் சென்று அடையுமா என்ற கேள்வி தற்போது தலைதூக்கியுள்ளது.

சுமார் 30 வருடங்களுக்குப் பின்பு வரலாற்றில் முக்கிய பங்கு வகிக்கவுள்ளதாக இந்நிகழ்வு-உதவி வழங்கல் இடம்பெறவுள்ளது. இதற்காக இவ்வரசாங்கம் 8 மாதகாலமாகத் தொடர்ந்து திட்டமிட்டு ஆராய்ந்து வந்துள்ளது. அவற்றுள் சில திட்டமிடல்கள் சாதகமாகவும், ஒரு சில பாதகமானதாகவும் அமைந்தன. முக்கியமாக நாட்டின் பொருளாதார அபிவிருத்தியை முன்வைத்து இவ்வுதவியைக் கோரியிருந்தது. அத்திட்டத்தில் ஒன்று "நாட்டை மீண்டும் மலரச் செய்வோம்" என்ற திட்டமாகும்.இவ் உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டிற்கு முன்னோடியாக அமெரிக்கா-வாஷிங்டனிலும் மினி மாநாடு நடந்துள்ளது யாவரும் அறிந்ததே. சம்பிரதாயபூர்வமான இம்மாநாட்டிலேயே டோக்கியோ மாநாட்டில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் உத்தியோக பூர்வமாக உடன்பாடு காணப்பட்டன. கடந்த 2000 ஆம் ஆண்டில் பாரிஸில் நடைபெற்ற இவ்வாறான மாநாட்டுடன் ஒப்பிடும் போது டோக்கியோ மாநாடு சாதகமானதாகவே அமைந்துள்ளது. இதற்கான காரணம் நாட்டில் கடந்த ஒன்றரை வருடங்களாக எழுச்சியுடனும் வீழ்ச்சியுடனும் நிலவும் சமாதானச் சூழ்நிலையே. "சமாதானம்" என்ற கருப்பொருளைப் பயன்படுத்தி வெளிநாட்டுச் சமூகங்களைக் கவர்ந்து சமாதானத்தின் பயனை மக்கள் அனுபவிக்க வெளிநாடுகள் உதவ வேண்டும் என்ற எண்ணத்துடன் இவ்வுதவியை ரணிலின் அரசு கோரியிருந்ததும் வெளிப்படை.

எனினும் ஆளும் ஐ.தே.மு அரசிற்குப் புலிகள் சமாதானப் பேச்சுக்களிலிருந்து விலகியமை, டோக்கியோ மாநாட்டில் பங்கேற்காமை என்பன பெரும் பிரச்சினையாகவே இருந்து வந்துள்ளது. வடக்கு-கிழக்கிற்குக் கிடைக்கப் பெறும் உதவிகள் சரியான விதத்தில் பயன்படுத்திக் கொள்ள தேவையான கட்டமைப்பு (இடைக்கால சபை) ஒன்றைக் கோரியே மாநாட்டில் பங்கு கொள்ள புலிகள் மறுப்புத் தெரிவித்தனர். காரணம் 'சிரான்' என்ற அமைப்பும் சரியாகச் செயற்படவில்லை என்றே புலிகள் கூறினர். ஒஸ்லோ மாநாட்டில் கிடைக்கப்பெற்ற 70 மில்லியன் தமது பகுதி மக்களுக்கு பயன்படவில்லை என்பதும் புலிகளின் குற்றச்சாட்டாகும். அது உண்மையே. அரசுக்குக் கிடைத்த அத்தொகையை வடக்குக் கிழக்கிற்குப் பயன்படுத்த தகுந்த கேள்விப் பத்திரங்கள் சட்டவிதிகள் இல்லாதிருந்ததால் அதன் பயன் இப்பகுதி மக்களுக்குக் கிட்டவில்லை. அவ்வாறான சட்டங்கள் தேவைப்படுமிடத்து புதிய சட்டங்கள் கொண்டுவரப்பட்டிருக்கலாம். அவ்வாறன்றி நினைத்த மாதிரிச் செயற்படுவது, செயற்படுத்துவது சாத்தியமாகாது. அபிவிருத்தியின் பயன்களைத் தென்பகுதி மக்கள் சுதந்திரமாக அனுபவிக்க, வடபகுதி மக்களுக்கு அது சாத்தியமாகவில்லை என பிரபாகரன் நினைத்திருக்கலாம். அன்றியும் தமது வீரத்தையும் தலைமைத்துவத்தையும் தமிழ் மக்களுக்குக் காட்ட விரும்பியிருக்கலாம் எனினும் அவர் தான் பணத்துக்கு அடிமையாக மாட்டேன் என்பதை வெளிப்படுத்தியுள்ளார் என்பதே பொருந்தும்.

ஆனால் ரணிலின் அரசோ மீண்டும் மீண்டும் வெளிநாட்டுத் தலைவர்களையும் தூதுவர்களையும் வன்னிக்கு அனுப்பி மாநாட்டில் புலிகளைப் பங்குபற்றச் செய்யக் கங்கணம் கட்டி நின்றது. எப்படியும் ஜப்பான் மாநாட்டில் புலிகளைப் பங்குபற்றச் செய்யும் அறிக்கைகளையும் விடுத்திருந்தது. எவ்வாறான அழுத்தங்களும் செல்லாக்காசாகிய நிலையில் அரசு புலிகளை விலைக்கு வாங்கலாம் என்ற எண்ணமும் கைகூடவில்லை. இதில் பிரபாகரனுக்கே வெற்றி. அத்தோடு அரசியலிலும் பாரிய பின்னடைவு என்றே கூறலாம்.



புலிகள் இயக்கமும் தமக்காகவே சிறிலங்காவுக்கு வெளிநாட்டு உதவிகள் கிடைப்பதாகக் கூறியிருக்கலாம். தமது பங்கேற்பு இன்றி உதவிகள் கிடைக்காது எனவும் கூறியுள்ளனர்.

ஐ.தே.மு அரசு பதவிக்கு வந்து ஒன்றரை வருடமாகியும் சாதித்தது என்ன என்பதை நோக்குமிடத்து சமாதானத்தை மட்டும் எப்படியோ ஓரளவு முன்னகர்த்தியுள்ளது. இதனால் மக்கள் சிறிது ஆறுதலடையலாம். அரசியல், பொருளாதார ரீதியில் அதன் திறமை மக்கள் எதிர்பார்த்தளவில் பூச்சியமே. மக்களை இன்னும் பொறுமையாக இருக்கவே அரசு கூறுகிறது. வாழ்க்கைச் செலவு குறைந்து விட்டது என அரசு கூறினாலும் அது மக்களால் உணரப்படவில்லை. பொ.ஐ.மு அரசால் மேற்கொள்ளப்படவிருந்த சில திட்டங்களை இவ்வரசாங்கம் ஆரம்பித்துள்ளது மட்டுமே. அதனால் தமது மதிப்பை பேணி வருகின்றது.

(உதவிகள் கிடைக்க முன்பு) உதவிகள் கிடைத்தால் இளைஞர்களின் வேலைவாய்ப்பு அதிகரிக்கப்படும். பொருளாதாரம் மேலோங்கும் என அரசு கூறி வந்துள்ளது. தற்போது உதவிகள் கிடைத்த பின் மக்களும் அதனையே எதிர்பார்க்கின்றனர். எனவே அவர்களின் எதிர்பார்ப்புக்களுக்கு அரசு அதிக பொறுப்பானதாக உள்ளது.

அதை விடுத்து சனாதிபதிக்குப் பின் தமக்கே மக்களின் பலம் அதிகரித்துள்ளது என மேடைகளில் முழங்குவதில் அர்த்தமில்லை. மக்களின் பலம் காலாவதியாகும் வரை மக்கள் எமக்கு இவ்வரசு ஒன்றையும் பெரிதாகச் சாதிக்கவில்லை என்று கூறுவதை வேறொரு சாரார் காதுகளில் கேட்காமல் இருப்பது ஆச்சரியமே. மாநாட்டுக்கு சனாதிபதி வாழ்த்துத் தெரிவித்துள்ளார். அதேவேளை, பொ.ஐ.மு. சிரேஷ்ட உறுப்பினர்கள் மாநாட்டுக்குப் பின்பு அரசு பற்றிக் கவனம் எடுக்கத் தீர்மானித்துள்ளனர். அரசியல் எப்படி இருப்பினும் மக்கள் நினைப்பது தாம் அனுபவிக்கும் துன்பங்களிலிருந்து இப்போது விடுபடுவதற் கேற்ற தருணம் தோன்றியிருப்பதாகவே கடந்த மாதம் சிறிலங்காவில் 5 மாவட்டங்களில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களின் நலனில்அக்கறை கொள்வது சிறப்பாகும். அரசியல்வாதிகள் பாதிக்கப்பட்டவர்கள் பற்றிச் சிந்திப்பது சிறந்தது. ஜப்பான் மாநாட்டுக்கு முன் உலகவங்கிப் பிரதிநிதி, ஆசிய அபிவிருத்தி வங்கிப் பிரதிநிதி சர்வதேச நன்கொடை நாடுகளின் பிரதிநிதி போன்றோர் இங்கு பொருளியல் நிபுணர்கள் முன்னிலையில் உரையாற்றினர்.

வெளிநாட்டு உதவியில் 75% த்தை சிறிலங்காவுக்கு வழங்குவதாகக் கூறியுள்ளனர்.

இவர்களின் கூற்றுகளின்படி நாட்டிற்குக் கிடைக்கும் உதவிகளின் உச்ச பயனை அரசு பெற்றுக்கொள்ளுமா என்பது பற்றி வெளிநாடுகளில் விமர்சனங்கள் தோன்றியுள்ளன. திடமான அரசியல் நிலைப்பாடு தற்போது சிறிலங்காவில் நிலவுகின்றதா என்பதே அந்த விமர்சனங்களின் பொருளாகும். ஆளுக்காள் பதவிப் போட்டிகள், முகாமைத்துவங்களின் போக்குகள் என்பன பற்றி அவர்களும் சிந்திக்கத் தொடங்கியுள்ளதாகவே புலப்படுகிறது. அபிவிருத்தித் திட்டங்களில் முக்கிய மாக நீர் விநியோகம், மின்சாரம் போன்ற முக்கிய தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள அரசு இயலாத நிலையிலேயே இருப் பதாக உலக வங்கிப் பிரதிநிதி பீற்றர் ஹரல்ட் தெரிவித்துள்ளார். தென்பகுதி அபிவிருத்திக்கு வெளிநாடுகள் உதவியளித்திருப்பினும் அதிகாரப் போட்டிகளால் அது உரிய முறையில் பயன்படுத்தப்படவில்லை என்பது அவரின் கருத்து. முதலில் அவ்வாறான அதிகார சபை ஒன்றை அமைப்பதற்கும், நிர்வகிப்பதற்குமே பெருந்தொகை செலவாகியுள்ளதாகவும் அவர் கூறியிருக்கிறார்.

இதற்கு முன்னைய ஆண்டுகளில் 500 முதல் 600 மில்லியன் அமெரிக்க டொலர்கள்

**மொழியாக்கம்-வடிவேல்**

வருடம் ஒன்றுக்கு வழங்கப்பட்டன. அவற்றுள் 250 மில்லியன் பயன்படுத்தப்படாமை அறியவருகிறது. அது போன்றே இந்நிதியும் பயன்படுத்தப்பட முடியாத சந்தர்ப்பம் ஏற்படுமா என்பது அவரின் கேள்வியாகும்.

கடந்த காலங்களில் வெளிநாட்டு உதவிகளில் செலவு செய்தது வருடம் ஒன்றில் 12% ஆக இருந்ததாகவும் பின்னர் அது 14% ஆக அதிகரித்ததாக அரசு கூறினாலும் சரியான முறையில் செலவிடப்பட்டிருப்பின் அது 22% ஆகும் என்பது நிபுணர்களின் கருத்தாகும். ஆகையால் என்ன வகையான தம்பட்டம் அடித்தும், பெறப்பட்டுள்ள நிதியைப் பயன்படுத்தாமல் பெட்டகங்களில் பூட்டி வைப்பின் நாட்டிற்கு நன்மையளிக்காது. வடக்கிற்குக் கிடைக்கும் உதவிகளைச் சரியான வழியில் பயன்படுத்த அரசு தயக்கம் காட்டுவதாலேயே புலிகள் அரசுடன் முரண்படுவது போன்று தென்பகுதி மக்களும் முரண்பட வாய்ப்பாகும்.

மேலும் இந்த நிதியில் பெரும் பகுதி கடனாகும். அவற்றுக்கு அரசு வட்டி வழங்கும். இந்த அரசு பதவிக்கு வந்த போது தனிநபர் ஒருவர் 77,500 ரூபா கடனாளியாக இருந்ததாக நிதியமைச்சர் தெரிவித்துள்ளார். பின்னர் இரண்டாவது வரவு-செலவு திட்டத்தின் போது அது 83,500 ஆக இருந்தது. அது இப்போது டோக்கியோ கடன் உதவியுடன் ஒரு இலட்சத்து நான்காயிரம் வரை செல்லலாமெனத் தோன்றுகின்றது. அந்த வகையில் இக்கடன் உதவி சரியான வழிகளில் மக்களைச் சென்றடையச் செய்வது அரசின் தலையாய கடமையாகும். தற்போது அமுலிலுள்ள "வேலை வழங்கப்படக் கூடாது" என்ற சுற்று நிருபம் ரத்துச்செய்யப்பட்டு வேலைவாய்ப்பு அதிகரிக்கப்பட வேண்டும். கடும் பொருளாதாரக் கஷ்டத்தில் வாழும் தொழிலாளர்களின் ஊதியம் அதிகரிக்கப்பட வேண்டும். அது போதுமானதாக இருக்க வேண்டும். இந்த ஜப்பான் உதவிகள் கிடைக்கப் பெறுவது நேரடியாக வரவு செலவுத் திட்டத்திற்கே. ஆகவே தகுந்த வழியில் செலவு செய்வது அரசின் பொறுப்பாகும். அத்துடன் வடக்கு-கிழக்கு மாவட்டங்கள் அதனை அண்டிய மாவட்டங்களான அம்பாறை, புத்தளம், அநுராதபுரம் ஆகியவற்றின் அபிவிருத்திக்காக 2500 கோடி ரூபா வீதம் நன்கொடை நாடுகள், 6 வருடங்களுக்கு 15,000 கோடி ரூபாவை ஒதுக்குவதாகக் கூறியுள்ளன. அவற்றை உரிய முறையில் பயன்படுத்த அரசு முயற்சிக்க வேண்டும். அதற்கான சட்ட விதிமுறைகளில் ஏற்பட்டிருக்கும் தடைகளை நீக்கிப் புதிய விதிமுறைகளை அரசு ஏற்படுத்த வேண்டும்.

அது மட்டுமன்றி அபிவிருத்திப் பணிகளில் அரசியல் அழுத்தங்கள் பிரயோகிக்கா வண்ணம் அரசு கவனம் செலுத்த வேண்டும். தற்போது அரசியல்வாதிகள் பல்வேறு ஊழல் மோசடிகளில் சிக்கியுள்ளனர். இவ்வாறான பிரச்சினைகளுக்கு இடமளிக்காமல் கிடைத்த நன்கொடை உதவிகளைப் பயன்படுத்துவது அரசின் கடமையாகும். □

# நெருக்கடிக்குள்ளான சமாதான சூழ்நிலையை மோசமாக்க படையினர் முயற்சிக்கின்றனர்!

## -யாழ்.பல்கலை மாணவர் ஒன்றியம்

**நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கும் சமாதான சூழ்நிலையை மேலும் மோசமாக்கும் வகையில் சிறிலங்காப் படையினரின் செயற்பாடுகள் அமைந்திருப்பதாக விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

புலிகளின் புளியந்தீவுக் கோட்டப் பொறுப்பாளர் சத்திய ராஜை விடுதலை செய்யக் கோரி கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் நடாத்தி வருகின்ற போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையிலே இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

பதற்ற நிலையைத் தோற்றுவித்து மக்களின் இயல்பு வாழ்க்கையைச் சீர்குலைத்து போர் ஒன்றை உருவாக்கும் நோக்கில் படையினர் ஈடுபட்டிருப்பதாகத் தமக்குச் சந்தேகம் ஏற்பட்டிருப்பதாக அவ்வறிக்கையில் மேலும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அத்துடன் அரசியல் பணிகளில் ஈடுபட்டிருந்த விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு மாவட்டத்திலிருக்கும் புளியந்தீவுக் கோட்டப் பொறுப்பாளரை படையினர் கைது செய்தமை புரிந்துணர்வு உடன்படிக்கையை மீறுகின்ற செயல் எனவும் கூறப்பட்டுள்ளது.

இந்நிலையில் நிராயுதபாணிகளாகிய விடுதலைப்புலிகளை ஆயுத பாணிகளாகிய படையினர் தொடர்ந்தும் கைது செய்து வருவதைக் கண்டித்துக் கிழக்குப் பல்கலைக் கழக மாணவர்கள் மேற்கொள்ளும் உண்ணாவிரதப் போராட்டத்திற்கு தாம் ஆதரவு வழங்குவதாகவும் கூறப்பட்டுள்ளது.

# மரநடுகைத் திட்டம்

(புதுக்குடியிருப்பு)

வற்றாப்பளையில் கடந்த 5 ஆம் திகதி சூழல் பாதுகாப்புத் தின நிகழ்வாக மரநடுகை மேற் கொள்ளப்பட்டது.

கண்ணகி அம்மன் ஆலய வீதியில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன முள்ளிய வளைப் பிரதேச இணைப்பாளர் ரமேஸ் தலைமையில் இந்த நடவடிக்கை ஆரம்பித்து வைக்கப் பட்டது. ஆலயக் குருக்கள் ஈஸ்வரன் அவர்கள் மரநடுகையை ஆரம்பித்துவைத்தார். (26)

# மகப்பேற்று மருத்துவமனையில் 275 பேருக்கு சிகிச்சை

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை மகப் பேற்று மருத்துவமனையில் பெப்ரவரி மாதம் 12ஆம் திகதி முதல் யூன் 11ஆம் திகதி வரை 275 கர்ப்பிணித் தாய்மார்கள் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை மேற்கொண்டுள்ளமை மேற்படி மருத்துவமனைக் குறிப்பேட்டின் மூலம் தெரியவந்துள்ளது.

இக்காலப் பகுதியில் மருத்துவமனையில் 185 பிறப்புக்கள் இடம்பெற்றுள்ளன.

இதில் இரண்டு சிசுக்கள் இறந்த நிலையில் பிரசவம் இடம் பெற்றுள்ளதுடன் பிறந்த பின் ஒரு சிசு இறந்துள்ளதாகவும் குறிப்பேட்டின் மூலம் தெரிய வந்துள்ளது.

கிளிநொச்சி நகரில் தற்போது மக்கள் மீளக்குடியமர்ந்து வரும் நிலையில் மாவட்ட வைத்தியசாலை அக்கராயனில் இயங்கி வருகின்றமையினால் கர்ப்பிணித்தாய்மார்கள் பல கிலோமீற்றர் தூரம் செல்ல வேண்டிய அவலநிலை ஏற்பட்டு இருந்தமையின் காரணமாக, கிளி. அரச அதிபர், கிளி. மாவட்ட வைத்திய அதிகாரி, மாவட்ட வைத்தியசாலை அபி விருத்திச் சங்கம், நலன் விரும்பிகள் ஆகியோரின் பெருமுயற்சியின் பயனாக மேற்படி இம் மகப்பேற்று மருத்துவமனை புதிதாக அமைக்கப்பட்டு 12.02.2003 அன்று திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# தூயவன் முன்பள்ளி திருவையாறில் திறப்பு

(வட்டக்கச்சி)

தமிழர் புனர்வாழ்வுக் கழக அனுசரணையில் கிளி.கிழக்குப் புனர்வாழ்வுக்கழகத்தால் கிளி. மாவட்டத்திலுள்ள திருவையாறு இரண்டாம் பகுதியில் தூயவன் முன்பள்ளி திறந்து வைக்கப் பட்டது. இந்த நிகழ்வு நேற்று முன்தினம் இடம் பெற்றது.

கிளி. கிழக்குப் புனர்வாழ்வு நிறுவனத் தலைமையில் ஆரம்பமான இந்நிகழ்வில் மங்கல விளக்கினைக் கிராம சேவையாளரும், சமூக பொது நல அபிவிருத்திக் குழுத் தலைவரும் ஏற்றி வைத்தனர். தமிழீழத் தேசியக் கொடியினை கிளிநொச்சிப் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் திருமறவன் ஏற்றிவைத்தார். மாவீரரின் படத்திற்கு மாவீரரின் பெற்றோர் மலர்மாலை அணிவித்து ஈகச் சுடர் ஏற்றி வைத்தனர். அடுத்து அகவணக்க நிகழ்வுடன் நிறுவனக் கொடியினை நிறுவன இணைப்பாளர் பெ. ஜெயசீலன் ஏற்றிவைத்தார்.

முன்பள்ளி மண்டபத்தைக் கரைச்சிப் பிரதேச செயலாளர் பொன்.நித்தியானந்தன் திறந்து வைத்தார்.

பெயர்ப்பலகையை ஊரக வளர்ச்சிப் பொறுப்பாளர் அன்பு மாறன் திரைநீக்கம் செய்து வைத்தார். ஆசிரியுரையினைத் திருவையாறு ம.வி அதிபர் ஆற்றினார். சிறப்புரையினைப் பொன்.நித்தியானந்தன் ஆற்றினார். (12)

# புலிகள் விவகாரத்தில் பா.ஜ.க. அரசாங்கம் ராஜீவ் கொள்கைகளைப் பின்பற்றக்கூடாது

## தமிழர் தேசிய இயக்கத் தலைவர் நெடுமாறன்

(சென்னை)

புலிகளின் விவகாரத்தில் ராஜீவ் காந்தி கடைப்பிடித்த தவறான கொள்கைகளை பாரதீய ஜனதா கட்சியும், கூட்டணி அரசும் கடைப்பிடித்தால் அது இந்தியாவின் நலனுக்கு உகந்ததல்ல என தமிழர் தேசிய இயக்கத்தலைவர் பழ. நெடுமாறன் கூறியுள்ளார்.

பொடோ சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலிலுள்ள இவரைக் கடந்த புதன்கிழமை பூந்தமல்லி நீதி மன்றத்திற்கு அழைத்துச் சென்ற வேளையில் செய்தியாளர்களுக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், வடக்கு-கிழக்கில் இடைக்கால நிர்வாக சபை அமைக்கப்படுவது தொடர்பாக புலிகளுடன் சிறிலங்கா அரசு பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

அத்துடன் இந்திய மத்திய அரசு பொடோ சட்டத்தை மீளப்பெற வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இவரது தடுப்புக்காவல் மேலும் இம் மாதம் 23ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

# இத்தாலி செல்ல முயன்ற 21 பேர் நீர்கொழும்பில் கைது!

(கொழும்பு)

இத்தாலிக்கு சட்டவிரோதமாகச் செல்ல நீர்கொழும்பில் தங்கியிருந்த 22 பேர் சிறிலங்காப் பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் வடக்கு-கிழக்கைச் சேர்ந்த தமிழர்கள் எட்டுப் பேர் என்றும் ஏனையோர் சிங்களவர்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இத்தாலிக்கு சட்ட விரோதமாக அனுப்பிவைப்பதற்காக இவர்கள் ஒவ்வொருவரிடமும் 50 ஆயிரம் ரூபா முற்பணம் வாங்கப்பட்டுள்ளதாகப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

## - துவிச்சக்கர வண்டிகளில் -

# சமாந்தரமாகச் சென்றோரிடம் குற்றப்பணம் அறவீடு

(அலுவலக செய்தியாளர்)

ஏ-9 வீதியில் துவிச்சக்கர வண்டிகளில் சமாந்தரமாகச் சென்ற மூன்று பேர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர்.

கடந்த வியாழனன்று கிளி. நகர் பகுதியில் வீதியில் சமாந்தரமாக துவிச்சக்கர வண்டியை ஓட்டிச் சென்றவர்களை தமிழீழ காவல்துறையின் வீதிப்போக்குவரத்துப் பிரிவினர் கைது செய்து நேற்று முன்தினம் கிளி. மாவட்ட தமிழீழ நீதிமன்றில் முற்படுத்தினர். தமிழீழ நீதிமன்றத்தினால் மூவருக்கும் தலா 500 ரூபா வீதம் குற்றப்பணம் அறவிடப்பட்டு விடுதலை செய்யப் பட்டுள்ளனர். (பா)

# இணக்கப்பாட்டு அரசியலுக்கு வருமாறு சனாதிபதியை ஹக்கீம் அழைக்கிறார்!

## - கடந்த காலப் போக்கை கைவிடவும் கோரல்

"கடந்த கால அரசியல் போக்கு கைவிடப்பட்டு வேறுபாடுகளைத் தீர்த்து வைக்கக் கூடிய அரசியலில் இணக்க முறை அனுகுமுறை ஒன்றை சனாதிபதியும் அரசாங்கமும் நாட்டின் வருங்கால நன்மை கருதிக் கையாள வேண்டும்" என துறைமுக அபிவிருத்தி கப்பல் போக்குவரத்து அமைச்சர் ஹக்கீம் டோக்கியோவில் இருந்து நாடு திரும்பியதும் விடுத்த விசேட அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

இவர் சிறிலங்கா - அரச குழுவின் அங்கத்தவர்களில் ஒருவராக உதவி வழங்கும் மாநாட்டில் கலந்து கொண்டார்.நாட்டை ஜக்கியப்படுத்தி அபிவிருத்தி செய்வதில் உலகின் கவனம் எம்மீது செலுத்தப்படுவதை அனைவரும் கவனத்தில் கொள்வது அவசியம் என்றும் அவர் கூறியுள்ளார்.

டோக்கியோ மாநாட்டில் விடுதலைப்புலிகள் கலந்து கொள்ளாத போதும் கூடுதலான உதவியை சிறிலங்கா இதற்கு முன் இல்லாதவாறு பெற்றுள்ளது என்றும், சில எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் பொய்ப்பிரச்சாரம் செய்து அரசியல் பிரச்சாரத்தில் இறங்கியுள்ளார்கள். இந்த நிலைமையை எதிர்க்கட்சியினர் தமது போக்கை மாற்றத் திற்கு கொண்டு வருவது அவசியம். அரசாங்கம் செய்யும் அனைத்தையும் எதிர்க்காமல் யதார்த்தமான முறையில் அணுகல் நடந்து கொள்ள வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

# மருத்துவர்கள் போராட்டம் இடைநிறுத்தம்; அரசாங்கத்தின் பதிலுக்காக காத்திருப்பு!

(கொழும்பு)

மருத்துவர்களின் வேலை நிறுத்தம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர்கள் மாநாட்டில் தகவல் தெரிவித்துள்ள அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் சங்கத் தலைவர் மருத்துவர் குமார் வீரசேகர, சகல அரசாங்க மருத்துவர்களும் நேற்று முன்தின இரவுடன் கடமைக்குத் திரும்புவார்கள் என்று கூறியுள்ளார்.

நேற்று பொசன் போயா தினமாகையால் அதனைக் கவனத்திற் கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

வேலைநிறுத்தம் ஆரம்பிக்கக் காரணமாக இருந்த பிரச்சினைகளுக்கு அடுத்த திங்கட்கிழமையளவில் நிவாரணம் வழங்கப்படும் என தமது சங்கம் நம்புவதாகவும் அவர் கூறியுள்ளார்.

பிரதம மந்திரியும், நிதியமைச்சரும் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மத்தியஸ்தம் செய்வார்கள் என்றும் சங்கம் நம்புகின்றது.

திங்கட்கிழமையளவில் பதிலேதும் கிடைக்கப்படாத பட்சத்தில் மேற்கொண்டு என்ன தொழிற்சங்க நடவடிக்கை எடுப்பது என்பது குறித்து தீர்மானிப்பதாக அரசாங்க மருத்துவ உத்தியோகபூர்வ சங்க நிலையில் குழு மீண்டும் கூடும் என்று மருத்துவர் வீரசேகர கூறியுள்ளார்.

தாம் சம்பள உயர்வையல்ல, சம்பள முரண்பாட்டை நீக்கும்படி கோருவதாகவே அவர் வலியுறுத்தியுள்ளார்.

வடக்கு-கிழக்கில் பணிபுரியும் மருத்துவர்களுக்கு மேலதிகப்படி ஒன்றையும் சங்கம் கோருகின்றது.

வேலைநிறுத்தம் மேற்கொள்ளப்பட்ட காலத்திலும், அவசர கால சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன என்றும் அவர் கூறியுள்ளார்.



## சிந்தனைக்கு

அடக்குமுறையாளர்கள் போராளிகளை அழிப்பதில் காட்டும் தீவிரத்தை விட பொது மக்களின் ஆன்மீக உறுதிநிலை உடைக்கவேண்டும் என்பதில் தான் அதிக அக்கறை காட்டுகின்றனர்.

**தமிழீழத் தேசியத்தலைவர்**

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 15-06-2003

# பொலிஸ் ஆட்சி!

யாழ். குடாநாட்டில் சிறிலங்காப் பொலிஸாரின் தொகை பெருமளவில் அதிகரிக்கப்பட்டிருத்தல் வேண்டும். யாழ். குடாநாட்டில், இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் செல்பவர்கள் இதனைக் கண்கூடாகவே அவதானிக்க முடியும். வீதி-வீதியாக, சந்தி-சந்தியாக சிறிலங்காப் பொலிஸாரின் நடமாட்டமும், தரித்து நிற்பதும் வெளிப்படையாகவே தெரிகின்றது.

ஆனால், மறுபுறத்தில் யாழ். குடாநாட்டில் என்றும் இல்லாத அளவில் சமூக சீர்கேடுகள் அதிகரித்துள்ளன. களவு, கொள்ளை, கொலை, பாலியல் வல்லுறவு, குடிபோதை என பல்வேறு வகையில் சமூக சீர்கேடுகள் பெருகியுள்ளன. சமூகச் சீர்கேடு நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்படாது போனால், சமூகம் பெரும் அபாயத்தை எதிர்கொள்ள வேண்டிவரும் என்ற எச்சரிக்கைகள் சமூக, நலன் விரும்பும் அமைப்புக்கள் இருந்தும்,பொது மக்களிடம் இருந்தும் விடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

ஆனால், யாழ். குடாநாட்டில் நிலை நிறுத்தப்பட்டுள்ள சிறிலங்காப் பொலிஸார், இத்தகைய சட்ட ஒழுங்கு மீறல் செயல்கள், சமூக விரோத சீரழிவு நடவடிக்கைகளில் ஈடுபடுவோரைக்கட்டுப் படுத்துவதாக இல்லை. அவர்களின் ஒரே குறியாக இருப்பது போக்குவரத்து விதிமுறைகள் தொடர்பான நடவடிக்கைகளிலேயே ஆகும். அதாவது, வாகனப் போக்குவரத்தைக் கண்காணிப்பதிலேயே அவர்களின் அக்கறையுள்ளது. குறிப்பாக வாகனங்களின் அனுமதிப்பத்திரங்கள் மற்றும் வாகனச் சாரதிகளின் அனுமதிப்பத்திரங்கள் என்பனவற்றைப் பரிசோதிப்பதாகவேயுள்ளது.

இப் பரிசோதனைகள் இலங்கையின் வேறு எப்பகுதியிலும் இல்லாத அளவிற்குக் கடுமையான அளவிலுள்ளது. பொதுவாகவே சிங்களப் பிரதேசங்களில் காணப்படாத அளவில் தமிழர் பிரதேசங்களில் இவ் வாகனப் போக்குவரத்து விதிகளைக் கடைப்பிடிப்பதில் பொலிஸார் தீவிரம் காட்டுகின்றனர் என்பது பொதுப்படையானது.

ஆனால், இது வாகனப் போக்குவரத்து விதிகள் கடைப்பிடிக்கப்படுதல் வேண்டும், வீதி விபத்துக்கள் தடுக்கப்பட வேண்டும், நெரிசல்கள் மட்டுப்படுத்தப்பட வேண்டும் என்பதற்காகவோ நடைபெறவில்லை. அவ்வாறானால், இதனைவிட மக்களின் நலனையும் 'நாட்டின்' நலனையும் பாதிக்கக்கூடிய ஏனைய சட்டவிரோத, சமூக விரோத நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதில் பொலிசார் அரசாங்கம் தீவிர அக்கறை காட்டியிருத்தல் வேண்டும்.

அது மாத்திரமல்லாது, போக்குவரத்து ஒழுங்கு விதிகளில் உண்மையிலேயே கரிசனை கொண்டவர்களாக இருந்திருப்பின் அவ்வக்கறை திடீரெனத் தற்பொழுது ஏற்படுவதற்குக் காரணம் தான் என்ன? சிறிலங்கா இராணுவம் 1995 இல் இருந்து யாழ். குடாநாட்டில் நிலைகொண்டுள்ளது. சிறிலங்காப் பொலிசாரும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர்.

அன்றிலிருந்து 2002 ஆம் ஆண்டு வரையில் வீதிப் போக்குவரத்து ஒழுங்கில் எந்தவித கட்டுப்பாட்டையும் சிறிலங்காப் பொலிசார் மேற்கொள்ளவில்லை. வாகன ஓட்டுநர் அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்குக்கூட நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை. அவ்வாறானால், தற்பொழுது மட்டும் சிறிலங்காப் பொலிசாருக்கு இத்தகைய விடயத்தில் கரிசனை ஏற்பட்டது ஏன்?

இதற்கு ஒரேயொரு பதில், யாழ். குடாநாடு சிறிலங்கா அரசினால் ஆளப்படுகின்றது என்பதை அரசாங்கம் பொலிசார் ஊடாக வலியுறுத்த முற்பட்டு நிற்பதே ஆகும். இதன் மூலம் தமிழ் மக்களின் சுதந்திரமான நடமாட்டத்தையும், நீங்கள் ஆளப்படுகின்றீர்கள் என்ற ஞாபகத்தையும் ஊட்ட சிறிலங்கா அரசாங்கமும், பொலிசாரும் முற்பட்டு நிற்கின்றனர் என்பதே உண்மையாகும்.

வீதிப் போக்குவரத்து ஒழுங்குவிதிகளைக் கடைப்பிடிக்குமாறு வலியுறுத்துவதோ, அது குறித்து சட்ட ஒழுங்கைப் பேணுமாறு வலியுறுத்துவதோ இங்கு தவறானதெனக் கூறவரவில்லை. அத்தோடு, யாழ். குடாநாட்டிற்கோ தமிழர்களுக்கோ இது புதியது ஒன்றும் அல்ல. 1983 ஆம் ஆண்டு வரையில் இவை கடைப்பிடிக்கப்பட்டும் வருகின்றன. அதுமாத்திரமல்ல, விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளிலும் காவல்துறையினர் வீதி ஒழுங்கைக் கடைப்பிடிக்காமல் இல்லை.

ஆனால், யாழ். குடாநாட்டில் வீதிப் போக்குவரத்து என்ற ரீதியில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கையானது தமிழ் மக்களை அச்சுறுத்தும் பாணியிலானதாக அவர்களின்சுதந்திர நடமாட்டத்தை கட்டுப்படுத்துவதுமாகின்றது. கடந்த காலத்தில் - யுத்தநிறுத்த உடன்பாட்டிற்கு முன்னதாக இராணுவத்தின் மூலம் இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொண்ட அரசு தற்பொழுது பொலிசைக் கொண்டு அதே பணியைச் செய்விக்க முற்பட்டு நிற்கின்றது. இத்தகைய நடவடிக்கைகள் சிறிலங்கா ஆட்சியாளர்கள் சமாதானம் குறித்து எவ்வளவு தான் பேசினாலும், அவர்களின் இனவாத - ஆக்கிரமிப்புச் சிந்தனை மாறவில்லை என்பதை வெளிக்காட்டுவதாக இருக்கும். இவ்வுணர்வு சிங்கள ஆட்சியாளர்கள், அதிகாரிகள் மட்டத்தில் மாறாத வரையில், இனப் பிரச்சினைக்கு அரசியல்தீர்வு என்பது கடினமானதாகவே இருக்கும்.

## இடைக்கால நிர்வாகம் தொடர்பாக

# பொ. ஐ. முன்னணியின் யோசனைகளை அரசு புலிகளிடம் முன்வைக்கலாம்!

(கொழும்பு)

விடுதலைப்புலிகளை மீண்டும் பேச்சுக்களில் இணைக்கும் முயற்சிகளில் மற்றொரு திட்டமாக சனாதிபதி சந்திரிகா 2000 ஆகஸ்டில் முன்வைத்த இடைக்காலசபை நிர்வாகம் பற்றிய யோசனைகளை ஐ.தே.மு.அரசு விடுதலைப்புலிகளிடம் முன்வைக்கத் திட்டமிட்டுள்ளதாக அறியவருகிறது.

புலிகள் தமது பகுதிக்கு ஓர் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு ஏற்படுத்தப்படாதவரை பேச்சுக்களில் கலந்துகொள்வதில்லை என்ற நிலையில் இருப்பதையடுத்து இத்திட்டத்தை கொண்டுவர அரசு எண்ணியுள்ளது என லங்காதீப நாளிதழ் கூறுகிறது.

சனாதிபதி கடந்த 2000ஆம் ஆண்டில் முன்வைத்த இடைக்கால நிர்வாக அமைப்பில் அதன் ஆயுட்காலம் ஐந்து வருடங்கள் எனவும் முதலமைச்சர் ஒருவரும் இரண்டு பிரதிமுதலமைச்சர்களும் கூடிய 75 உறுப்பினர்களும் அங்கம் வகிப்பர். அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியிலிருந்தும், சுயேட்சைக் குழுவிலிருந்தும் உறுப்பினர் நியமிக் கப்படுவர். இவர்கள் சனாதிபதியினால் நியமிக்கப்படுவர். அங்குவாழும் இனங்களின் தொகைக்கேற்ப இவர்கள் நியமனம் பெறுவர். இந்தச் சபைக்கு பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படும். இந்தத் தீர்மானம் புலிகளுக்கு அனுப்பிய பிறகு மறைந்த அமைச்சர் அஷ்ரப்பின் யோசனைக்கமைவாக முஸ்லிங்களுக்காக கிழக்கில் தனியான நிர்வாக அலகுபற்றி சனாதிபதியிடமும், புலிகளிடம் பேசித் தீர்மானிக்கப்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது என அந்நாளிதழ் கூறுகிறது.

# யுத்தத்திற்கான சாத்தியப்பாடு குறைவு; இராணுவத்தை தயாராகவைக்க வேண்டும்!

## - பொ.ஐ.மு.ஊடகப் பேச்சாளர் கருத்து

(கொழும்பு)

யுத்தமொன்று ஏற்படாவிட்டாலும் இராணுவத்தை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். இவ்வாறு சிறிலங்காவின் பிரதான எதிர்க்கட்சியான பொதுசன ஐக்கிய முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் மத்தியில் பேசிய அவர்; யுத்தம் மீண்டும் ஏற்படுவதற்கான சாத்தியப்பாடுகள் குறைவு என்றாலும் படையினரை அதற்குத் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டியது அவசியமாகும் என்றார்.

அவர் மேலும் கூறுகையில், ஐ.தே.மு டோக்கியோவில் பெற்ற கடன் தொகை என்னவகையானது ,எவ்வழியில் செலவிடப்படும், வட்டி வீதம் என்ன என்பன பற்றி விரிவான விளக்கமளிக்க வேண்டும். தற்போது அமைச்சர்கள் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டு வருவதால் இந்நிதி அமைச்சுக்களுக்கூடாக அன்றி தனியான அமைப்புக்கள் மூலம் அபிவிருத்தி நடவடிக்கைகளில் மேற்கொள்ளவிருப்பதாகத் தெரிகிறது என்றார்.

உங்கள் கட்சி ஜே.வி.பி.யுடன் கூட்டணி உறுதியாகிவிட்டால் இந்த நிதியில் உங்களுக்கும் பங்கு இருக்கிறதல்லவா என்று கேட்கப்பட்டதற்கு பதில் எதுவும் கூறாத பேச்சாளர் அமுனுகம நிதியின் தன்மைபற்றி எமக்கு இன்னும் தெளிவில்லை எனக் கூறியுள்ளார்.

# பிஸ்ரல் குழுவினரைக் கட்டுப்படுத்த விசேட பொலிஸ் குழு அமைப்பு!

(கொழும்பு)

பிஸ்ரல் குழுவினரின் தாக்குதல்களைக் கட்டுப்படுத்தி அவர்களைக் கைது செய்ய விசேட பிரிவொன்றை சிறிலங்கா பொலிஸ்மா அதிபர் ரி.ஈ.ஆனந்தராஜா அமைத்துள்ளார்.

அண்மைக்காலமாக கொழும்பு நகரிலும், வடக்கு-கிழக்கு சிறிலங்கா இராணுவக் கட்டுப்பாட்டு பகுதிகளிலும் இவ்வாறான தாக்குதல்கள் பல இடம்பெற்றுள்ள நிலையிலேயே இந்தப் பிரிவு அமைக்கப்பட்டுள்ளது.

பாதாள உலகக் குழுக்களின் செயற்பாட்டைக் கட்டுப்படுத்தும் நோக்கில் அமைக்கப்பட்ட விசேட குற்றத் தடுப்பு பொலிஸ் பிரிவின் கீழேயே இந்த விசேட பிரிவும் இயங்கவுள்ளது.

மேலும், இப்பிரிவு உடனடியாக கொழும்பு,யாழ்ப்பாணம்,திருகோணமலை,மட்டக்களப்புப்பகுதிகளில் செயற்படவுள்ளது. தேவையேற்படின் இப்பிரிவினருக்கு உதவியாகச் செயற்பட இராணுவத்தினரும் அழைக்கப்படுவரெனவும் வீதித் தடைகளை ஏற்படுத்தி சோதனைகளை மேற்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# போதைப்பொருள் குற்றச்செயல்களை தடுக்க சட்டங்களை மாற்றியமைக்க முடிவு!

(கொழும்பு)

போதைப் பொருள் குற்றச் செயல்களுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கையை எடுக்கும் வகையில் தற்போதுள்ள சட்டங்களை மாற்றியமைக்க உள்ளதாக சிறிலங்கா தேசிய அபாயகரப் பொருட்கள் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் பேராசிரியர் ரவீந்திர பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

உள்துறை பாதுகாப்பு அமைச்சின் ஏற்பாட்டில் தேசிய அபாயகர பொருட்கள் கட்டுப்பாட்டுச் சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் கல்வி, பொருளாதாரம், சுகாதாரம்,சமூக, குடும்ப சீர்கேடுகளுக்கும் போதைப்பொருட்களே பிரதான காரணமாக இருக்கிறது. இதனைக் கட்டுப்படுத்தி சமூக முன்னேற்றங்களை ஏற்படுத்த நாடளாவிய ரீதியில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.


# ஆசிய டேவிஸ் கிண்ண டென்னிஸ் போட்டிகள் 18-ல் ஆரம்பமாகும்

உலகில் சிறப்பான டென்னிஸ் போட்டி எனக் கருதப்படும் "டேவிஸ் கிண்ண ஆசிய வலய நாடுகளுக்கிடையிலான நான்காம் தர டென்னிஸ் போட்டிகள் எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் கொழும்பு 'கிறீன்பாத்'தில் உள்ள டென்னிஸ் சங்கத் தலைமையகத்தில் ஆரம்பமாகும். இதில் எட்டு நாடுகள் பங்கேற்கின்றன. இரண்டு பிரிவுகளாக நடைபெறும் போட்டியில் ஒரு பிரிவில் 4 குழுக்கள் பங்குபற்றும் முதல் சுற்றில் பிரிவுக் குழுக்கள் தம்மிடையே மோதும். வெற்றிபெறும் பிரிவுக் குழுக்கள் இறுதியாக மோதும் ஒரு குழுவில் ஏழு பேர் அடங்குவர்.

போட்டியில் பங்குபற்றும் நாடுகள் சவுதி அரேபியா, ஓமான், பங்களாதேஷ், மியன்மார், சிங்கப்பூர், புருணை, வியட்நாம் மற்றும் சிறிலங்கா ஆகியன கலந்துகொள்கின்றன.

## மைதானங்கள் மாற்றம்

இங்கிலாந்து அணியின் சிறிலங்காவுக்கான சுற்றுலாவிற்கான போட்டி மைதானங்களில் மாற்றம் செய்யப்படவுள்ளது. எதிர்வரும் நவம்பர் மாத பிற்பகுதியில் இங்கிலாந்து அணி சிறிலங்காவுக்கு விஜயம் செய்து மூன்று ஒரு நாள் போட்டி யிலும், இரண்டு டெஸ்ட்போட்டி யிலும் விளையாடவுள்ளன. முதலாவது டெஸ்ட் போட்டி தவிர்ந்த ஏனைய அனைத்துப் போட்டிகளும் கொழும்பில் நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் தற்போது மைதானங்களில் மாற்றம் செய்யப்படும் என சிறிலங்கா கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.




# லோசன் நீக்கம்

இலங்கைக்கு எதிராக நடைபெறவுள்ள இரண்டு டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளுக்கான மேற்கிந்திய குழுவிலிருந்து வேகப்பந்து வீச்சாளர் லோசன் நீக்கப்பட்டுள்ளார்.

21 வயதான இவரது முதுகுப் பகுதியில் ஏற்பட்ட கடுமையான உபாதை காரணமாகவே இவரைக் குழுவிலிருந்து நீக்கியுள்ளதாக மே.இ. கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்துள்ளது.

இலங்கை மேற்கிந்திய முதலாவது டெஸ்ட் போட்டி எதிர்வரும் வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

# பின்னடைவுகளைச் சமாளித்து சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்படும்

## அம்பாறையில் பிரதமர் ரணில்

(கொழும்பு)

தற்போதைய பின்னடைவுகளைச் சமாளித்து சமாதான முயற்சிகளைத் தொடர்ந்து முன்னெடுக்கப்போவதாக சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

அம்பாறைக்கு நேற்று விஜயம் செய்த பிரதமர் அங்கு பௌத்த வழிபாட்டுத் தலம் ஒன்றில் இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு கூறியுள்ளார்.

தற்போதைய சமாதான நடவடிக்கைகளில் குறைபாடுகள் இருக்கின்றன. இருப்பினும், இந்த குறைபாடுகளுக்கு மத்தியிலும் யுத்த அனர்த்தங்கள்இன்றிமக்கள்சிறந்த வாழ்க்கையை அனுபவித்து வருகின்றனர்.

நாட்டில் இன ஒற்றுமையை மேலும் பலப்படுத்தி இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் வகையில் தொடர்ந்தும் சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதே அரசாங்கத்தின் நோக்கமாகும் என பிரதமர் மேலும் கூறியுள்ளார்.

# வெண்புறா செயற்கை உறுப்பு நிறுவன 10 ஆம் ஆண்டு நிறைவு விழா

(அலுவலக செய்தியாளர்)

வெண்புறா செயற்கை உறுப்பு தொழில் நுட்ப நிறுவனம் எதிர்வரும் 18ஆம் திகதி தனது 10ஆவது ஆண்டு நிறைவு விழாவினைச் சிறப்பாகக் கொண்டாடவுள்ளது.

கிளிநொச்சியில் அமைந்துள்ள மையப்பணியகத்தில் மேற்படி விழா நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

போர் நடவடிக்கைகளினால் ஆவயவங்களை இழந்த மக்களுக்கு மேற்படி நிறுவனமே செயற்கை உறுப்புக்களைத் தயாரித்து வழங்கி வருவதுடன் மக்களுக்கான கண்ணி வெடி விழிப்புணர்வுச் செயற்பாடுகளையும் மேற்படி நிறுவனம் மேற்கொண்டு வருகின்றது.

ஜேர்மன், பிரித்தானியா நாடுகளின் த.பு.கழகக் கிளைகளின் ஆதரவுடன் வெண்புறா நிறுவனம் தாயகத்தில், மேற்படி பணியினை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# தமிழ்க்குழு உறுப்பினர்கள் கொலை தான் தலையிடவேண்டியநேரம் வந்துள்ளதாம்

## சனாதிபதி சந்திரிகா கூறுகின்றார்

தமிழ்க்குழு உறுப்பினர்கள் கொல்லப்படுவது தொடர்பாக தானே தலையிட்டுசில நடவடிக்கைகளை எடுக்கவேண்டிய நேரம் வந்துள்ளதாக சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக சனாதிபதியின் ஊடகப்பேச்சாளர் ஜனதாச பீரிஸ் கருத்துத் தெரிவிக்கையில;

தமிழ்க்கட்சிகள் மீது தாக்குதல்கள் அதிகரித்துவருகின்றன. தங்களுக்கு போதிய பாதுகாப்பு வழங்கப்படவில்லையென அக்கட்சிகள் கூறுகின்றன. தாங்கள் ஒப்படைத்த ஆயுதங்களைத் தங்களிடம் திருப்பித்தந்துவிட வேண்டும் என இவர்கள் கூறுகின்றனர்.

இந்நிகழ்வுகள் சனாதிபதிக்கு மிகுந்த கவலையைத் தந்துள்ளது. சனநாயக வழிக்குத் திரும்பிய போராட்டக்குழுக்கள்புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில்தங்களுடைய ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இருப்பினும் சில ஆயுதங்களை தற்பாதுகாப்பிற்காக அவர்களே வைத்துக்கொள்ள வேண்டுமென சனாதிபதி கூறியிருந்தார். ஆனால் அக்கருத்து நிறைவேற்றப்படவில்லை.

அதனால் சனாதிபதி தானே நேரடியாகத் தலையிட்டு சில நடவடிக்கைகளை எடுக்கவேண்டிய நேரம் இது வெனக் கூறியுள்ளார் மேலும் தமிழ்க் கட்சிகளின் தற்போதைய கோரிக்கை நியாயமானது தான் என சனாதிபதி கருதுவதாக அவர் மேலும்கூறியுள்ளார்.

ஆயுதங்கள் அனைத்தையும் தமிழ் கட்சிகளிடம் திருப்பி கொடுக்கவேண்டும் என அவர்கள் நினைக்கவில்லை அவர்களின் தற்காப்பு நோக்கில் சிலஆயுதங்களை மட்டும் திருப்பிகொடுக்க வேண்டும் என சனாதிபதி கருதுகிறார். ஏனெனில் புலிகள் இன்னும் ஆயுதங்களை வைத்திருக்கின்றனர். என அவர் மேலும் கூறியுள்ளார்.

## வடக்கு-கிழக்கு உள்ளூராட்சித் தேர்தல்

# இரத்து செய்வது தொடர்பாக புதன்கிழமை விவாதம்

வடக்கு-கிழக்கில் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலுக்கான வேட்பு மனுக்களை இரத்து செய்து புதிய வேட்பு மனுக்களைக் கோருவதற்கான சட்ட திருத்தப் பிரேரணை எதிர்வரும் புதன்கிழமை நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்படவுள்ளது.

இப்பிரேரணை கடந்த மாதம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இதன் மீது விவாதம் நடாத்தப்பட்டு எதிர்வரும் புதன் கிழமை மாலை அதன் மீதான வாக்கெடுப்பு நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பிரேரணை நிறைவேற்றப் படுமிடத்து எதிர்வரும் 25ஆம் திகதி நடைபெறவுள்ளதாகத் திட்டமிடப்பட்டுள்ள உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல்பிற்போடப்படலாம் என தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நாடாளுமன்றத்தில் இச்சட்டம் நிறைவேற்றப்பட்டதும் கடந்த வருடம் தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனுக்களை இரத்து செய்வது தொடர்பாக தேர்தல் திணைக்களம் அறிவிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# நிதி ஆணைக்குழு தலைவராக நியமனம்

சிறிலங்கா அரசு அமைக்கவிருக்கும் சுயாதீன நிதி ஆணைக்குழுவிற்கு அசோக எஸ். குணவர்த்தன தலைவராக நியமிக்கப்படவிருக்கின்றார்.

டி.பி.டி. சில்வாவின் பெயர் பரிந்துரை செய்யப்பட்டிருந்த போதும் அப்பொறுப்பை முழுமையாகத் தன்னால் ஏற்றுக் கொள்ள முடியாதென அவர் தெரிவித்துள்ளதையடுத்தே குணவர்த்தன நியமிக்கப்பட்டுள்ளார்.

இக்குழுவின் ஏனைய அங்கத்தவர்களாக என்.ரி.எம். பெரேரா, ஏ.டிப்பவில் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

# கோணாவில் - கந்தபுரம் மரப்பாலம் சேதமடைந்த நிலையில்

(அலுவலக செய்தியாளர்)

கோணாவில் கந்தபுரம்வீதியிலுள்ள மரப்பாலம் சேதமடைந்து பாலத்திற்கு போடப்பட்டுள்ள சிலிப்பர் கட்டைகள் சேதமடைந்த நிலையில் உள்ளதனைக் காணக்கூடியதாகவுள்ளது.

மேற்படி பாலத்தினூடாகவே கிளிநொச்சியிலிருந்து கந்தபுரம் ஊடாக மல்லாவி மடுப்பகுதிகளுக்கு பயணிகள்பேருந்துக்கள் மற்றும் தனியார் பேருந்துகளும் பயணங்களை மேற்கொண்டுவருகின்றன.

ஏற்கனவே யூனியன்குளம் பாலம் சேதமடைந்து போக்குவரத்துக்கள் மேற்கொள்ளமுடியாத நிலையில் உள்ளமையின் காரணமாக இம்மரப் பாலத்தினூடாகவே பேருந்துகள் தற்போது பயணங்களை மேற்கொண்டுவருகின்றன.

இப்பாலமும் பழுதடைந்து காணப்படுவதன் காரணத்தினால் பேருந்துகள் பெரும் அச்சத்துடனேயே மேற்படி பாலத்தினூடாகப் பயணங்களை மேற்கொள்வதனைக் காணக்கூடியதாகவுள்ளது.

மேற்படி பாலம் புனரமைக்கப்படாது மேலும் சேதமடையும் பட்சத்தில் கிளிநொச்சியிலிருந்து கோணாவிலூடாக கந்தபுரம் செல்லும் பாதை துண்டிக்கப்படும் நிலை ஏற்படலாமென அப்பகுதி மக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.(சோ)

# அம்பாறையில் பிரதமர் ரணில்

(கொழும்பு)

சிறிலங்காப்பிரதமர் ரணில் அம்பாறைக்கு விஜயம் செய்துள்ளார்.

சுகாதார அமைச்சின்கிளை அலுவலகம் ஒன்றை அவர் அங்கு திறந்துவைத்துள்ளார். வடகிழக்கில் சுகாதார தேவைகளை விருத்தி செய்வதற்காக விசேடதிட்டமொன்று தற்போது அமுல்செய்யப்பட்டு வருவதாக அவர் கூறியுள்ளார்.

# மினுவாங்கொட நகர சபைத் தலைவர் பதவியிலிருந்து இடை நிறுத்தம்

(கொழும்பு)

கம்பகா மாவட்டத்திலுள்ள மினுவாங்கொட நகர சபைத் தலைவர் நியூட்டன் குலசூரியவை அந்த பதவியிலிருந்து இடை நிறுத்துவதாக மேல்மாகாண முதலமைச்சர் றெஜினோல்ட்கூரே அறிவித்துள்ளார்.

இவர் மீது எழுந்துள்ள ஊழல் குற்றச்சாட்டுக்களின் அடிப்படையிலேயே இடை நிறுத்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நகரசபைக்குரிய சொத்துக்களை முறைகேடாகப் பயன்படுத்தி வருவதாகவும், தமது கடமையின் போது தான் தோன்றித்தனமாக செயற்பட்டு வருவதாகவும் இவர் மீது குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளது. இவை குறித்து விசாரிக்க ஓய்வுபெற்ற நீதிபதி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் முதலமைச்சர் றெஜினோல்ட்கூரே கூறியுள்ளார்.

### ஈ.பி.ஆர்.எல்.எவ்...

பினராகவும் பதவி வகித்துள்ளார். அத்துடன் இந்தியாவின் புலனாய்வுப் பிரிவான "றோ"வின் நெருங்கிய நண்பனாகவும் இவர் இருந்ததாகக் கூறப்படுகின்றது.

வழமையாக உடற்பயிற்சியில் ஈடுபட்டுவரும் தமது தலைவரை விடு தலைப் புலிகள் யாழ். வேம்படி மகளிர் கல்லூரியிலிருந்து தாக்கிவிட்டு வாகனத்தில் தப்பிச் சென்றதாகவும், இது தொடர்பாக தாங்கள் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறையிட்டுள்ளதாகவும் ஈ.பி.ஆர்.எல். எவ்.வரதர் அணியின் யாழ்ப்பாண அலுவலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இப்படுகொலைச் சம்பவத்திற்கும் தமக்கும் எந்தவித தொடர்பும் கிடையாதென விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இச்சம்பவம் தொடர்பாக நேரடி விசாரணைகளை யாழ். பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, சம்பவ இடத்திற்கு யாழ். மாவட்ட நீதவான் ஆர். ரி. விக்னராஜா நேரடியாகச் சென்று நிலைமைகளை அவதானித்ததுடன் பிரேத பரிசோதனைக்காக சடலத்தை யாழ். போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

இப்படுகொலைச் சம்பவத்திற்கு ஈபி.ஆர். எல்.எவ். அணியிலிருந்து பிரிந்து சென்ற சுரேஸ் அணிக்கு தொடர்பு இருக்குமா என்ற கோணத்திலும் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

### பலாலி வந்த...

லைப் பகுதியைப் பார்வையிடவும், தொடர்ந்து அரச செயலகத்தில் கலந்துரையாடல் ஒன்றை நடாத்துவதற்காகவும் இவர்கள் யாழ்ப்பாணம் வருகை தந்தமை குறிப்பிடத்தக்கது.

### கடற்படை காட்டிய...

பட்டுள்ளது.

சர்வதேச கடற்பரப்பில் 266 கடல் மைல் பிரதேசத்தில் இடம் பெற்ற இச்சம்பவத்தைத் தமது கடலாதிக்கப் பிரதேசத்தில் இடம் பெற்றதாக கண்காணிப்புக் குழுவினரையும், ஏனையோரையும் நம்பவைக்கும் நோக்குடனேயே கடற்படையினர் 110 கடல் மைல் தொலைவில் இச்சம்பவம் இடம் பெற்றதாக ஓர் இடத்தைச் சுட்டிக் காட்டியிருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

### வடமராட்சியில்...

மிலும் வாகனங்களிலிருந்து வந்த பொது மக்களை நடந்து செல்லுமாறு கூறிய படையினர் வாகனங்களை கடுமையாக சோதனையிட்டதாகத் தெரியவருகின்றது. (27)

### பரிசோதனைக்கு...

7.00 மணியளவில் எமது கப்பல் சிறிலங்காக் கடற்படையினரால் பரிசோதிக்கப்படுவதற்கு எமது கப்பல் கப்டனால் அனுமதிக்கப்பட்டது.

இச்சம்பவம் சர்வதேச கடற்பரப்பில் நடைபெற்றுக்கொண்டிருந்த வேளை, காலை 7.00 மணியளவில் எமது சமாதானச் செயலகத்தினர் இச்சம்பவம் குறித்து உடனடியாகவே போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு முறைப்பாடு செய்தனர். ஆயினும், காலை 7.30 மணியளவில் எமது கப்பல் மீது P- 701, P 330, P332, P341 மற்றும் P340 ஆகிய இலக்கங்களைக் கொண்ட கடற்படைக் கப்பல்கள் எமது கலம் மீது திடீர்த் தாக்குதலை மேற்கொண்டன. சில நிமிடத் தாக்குதலின் பின் எமது கப்பலின் மாலுமிகளை உயிர் காப்புப் படகு மூலம் தமது கடற்கலத்திற்கு வருமாறு கட்டளையிட்டனர். எமக்கு இத்தகவலைத் தெரிவித்த பின்னர் உயிர் காப்புப் படகிலேறிய எமது மாலுமிகள் சிறிலங்காக் கடற்படை கலத்திற்குச் சென்றனர்.

இச்சம்பவம் தொடர்பாக கண்காணிப்புக் குழுவிற்கு உடனடியாகத் தகவல் கொடுத்த விடுதலைப் புலிகள் குறிப்பிட்ட கடற்பிரதேசத்திற்கு கண்காணிப்புக் குழுவினரைச் சென்று நிலைமையை உடன்ஆராயுமாறுக்கேட்டுக் கொண்டனர். கடற்படையினரால் கைது செய்யப்பட்ட எமது போராளிகளுக்கு எந்தவிதத் தீங்கும் ஏற்படாதிருக்க கண்காணிப்புக் குழுவினரே ஏற்ற நடவடிக்கைகளை எடுத்து அப்போராளிகளைப் பாதுகாக்க வேண்டும் என்பதையும் விடுதலைப் புலிகள் நேற்றுக் காலை கண்காணிப்புக் குழுவிற்குத் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, கடற்படையினர் விடுதலைப் புலிகளின் கலத்தைத் தாக்கி மூழ்கடித்த போது தமது உயிரைப் பாதுகாக்கவென உயிர் காப்புப் படகுகளில் கடற்படைக் கலத்திற்குச் சென்ற எமது போராளிகளைக் கடற்படையினரே கைது செய்துள்ளனர். ஆனால், புலிகளின் கலம் தாக்கப்பட்ட போது உயிர்தப்பிய எவரையும் தாம் கைது செய்ய வில்லை என சிறிலங்காக் கடற்படையினர் கண்காணிப்புக்குழுவினருக்குத்தெரிவித்துள்ளனர்.

# சாவு அறிவித்தல்

## திரு. பழனிவேல் மகேஸ்வரன்

புங்குடுதீவு 10ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் தற்பொழுது கனகாம்பிகைக்குளம்,கிளிநொச்சியில் வசித்து வருபவருமான பழனிவேல் மகேஸ்வரன் 14.06.2003 நேற்று காலமானார்.இவர்காலஞ்சென்றபழனிவேல் சின்னாச்சிப்பிள்ளையின் பாசமிகு மகனும் காலஞ்சென்ற அருளம்பலம் சின்னத்தங்கத்தின் மருமகனும் பாக்கியலெட்சுமியின் அன்புக் கணவரும், அஜந்தா (ஆசிரியை திருமுறிகண்டி இந்து வித்தியாலயம்), சுகந்தன், தேவானந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், கமலா (ஓய்வு பெற்ற ஆசிரியை கொழும்பு), கணேஸ் சுந்தரலிங்கம் திட்டப்பணிப்பாளர் (கச்சேரி திருகோணமலை), மகாலிங்கம் (ஜேர்மன்), இந்திராணி, தெய்வநாயகி ஆகியோரின் அன்புச்சகோதரனும், விஜயரட்ணம் தெய்வேந்திரநாதன், பேரின்பநாதன் (வைத்தியர் யாழ்ப்பாணம்),விமலாதேவி, தனலட்சுமி (நுண்ணாய்வாளர் கிளிநொச்சி வைத்தியசாலை), குணரத்தினம் (மலேரியா தடை இயக்கம்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரிகைகள் இன்று 15.06.2003 ஞாயிற்றுக்கிழமை பி.ப. 12.00 மணிக்கு கனகாம்பிகைக்குளம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். அவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

(சி-8166) **பாக்கியலட்சுமி (மனைவி)**

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஜூன் மாதம் 15ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.